# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2017–2018

### மானியக் கோரிக்கை எண்.17

ஓ.எஸ். மணியன்
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

# அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலை | 2 |
| 3 | கைத்தறி மற்றும் துணிநூல் துறை | 29 |
| 4 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில அளவிலான குறிப்பிட்ட திட்டங்கள் | 34 |
| 5 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் | 72 |
| 6 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்கள் | 125 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 7 | துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்:- | | |
| | 7.1 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை | 149 |
| | 7.2 | கூட்டுறவு நூற்பாலைகள் | 152 |
| | 7.3 | தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர் | 162 |
| | 7.4 | தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் | 166 |
| | 7.5 | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு | 168 |
| | 7.6 | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை | 170 |
| | 7.7 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை | 172 |
| 8 | 2017 – 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | | 193 |

# கைத்தறி மற்றும் துணிநூல்

## 1. முன்னுரை

இந்திய ஜவுளித் தொழில் வளமான மற்றும் பல்வேறு வகையான நடவடிக்கைகளை உள்ளடக்கிய கைநெசவு பிரிவு ஒருபுறமும், அதிக மூலதனத்தைக் கொண்ட ஆலை பிரிவு மறுபுறமும் பிரதிபலிக்கிறது. இந்த அமைப்பானது, கைத்தறிகள், விசைத்தறிகள், தானியங்கித் தறிகள், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பிரிவுகள் போன்றவற்றின் செயல்பாடுகளை உள்ளடக்கியதுடன், பருத்தி, பட்டு, சணல் மற்றும் கம்பளி இழை மற்றும் செயற்கை இழை பயன்பாட்டையும் உள்ளடக்கியதாகும். இந்திய ஜவுளித் தொழிலானது, தொழில் மற்றும் விவசாயத்துடன் நெருங்கிய தொடர்புள்ளதாலும், நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மரபுகளுடன் தொடர்புள்ளதாலும், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் தனித்துவம் பெற்று திகழ்கிறது.

ஜவுளித் தொழில், உள்நாடு மற்றும் வெளிநாடுகளின் சந்தைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு சந்தைப் பிரிவுகளில் விற்பனையாகக்கூடிய பொருட்களைத் தயாரிக்கக்கூடிய தனித்திறன் பெற்று விளங்குகிறது. ஜவுளித் தொழிலானது நாட்டின் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றில்

பங்களிப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுள்ளது. இத்தொழிலானது நாட்டின் மொத்த உற்பத்தியில் 10 விழுக்காடும், உள்நாட்டு உற்பத்தியில் 2 விழுக்காடும் மற்றும் ஏற்றுமதி வருவாயில் 13 விழுக்காடும் தமது பங்களிப்பினை வழங்குகிறது. ஜவுளித் தொழிலானது நாட்டில் 4.5 கோடி மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்குவதால், பெருமளவு வேலைவாய்ப்பு வழங்குவதில் ஒன்றாக திகழ்கிறது.

ஜவுளித் தொழில், மாநில பொருளாதாரத்தில் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. கூட்டுறவு மற்றும் பரவலாக்கப்பட்ட பிரிவில் இந்திய ஜவுளித் தொழில் வளர்ச்சி அடைவதில், தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது, கைத்தறி, விசைத்தறி, நூற்பு பிரிவு, பதனிடும் பிரிவு மற்றும் ஆடைப் பிரிவில் ஆயத்த ஆடை மற்றும் ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பது ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும்.

## 2. துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலை

### (அ) கைத்தறிப் பிரிவு

கைத்தறித் தொழிலானது, மிக முக்கிய பழமை வாய்ந்த மற்றும் பாரம்பரிய குடிசைத்தொழிலாக திகழ்வதுடன்,

கிராமப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது. கைத்தறித் தொழில் இத்தலைமுறையின் ஒரு விலைமதிப்பற்ற தொழிலாக விளங்குவதுடன் நாட்டின் செழுமை, பன்முகத்தன்மை மற்றும் நெசவாளர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் உள்ளது. கையினால் நெசவு செய்யும் தன்மையானது நாட்டின் பாரம்பரிய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. இத்தொழிலின் திறன் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு தொடர்ச்சியாகக் கொண்டு செல்லப்படுகிறது. இப்பிரிவின் வலிமையானது, அதனுடைய தனித்துவம், உற்பத்தி நெகிழ்வு, வெளிப்படையான புதுமை முயற்சிக்கு வாங்குவோரின் விருப்பத்திற்கு ஏற்ப மாறுதல் மற்றும் பாரம்பரிய செழுமைத் தன்மை ஆகியவற்றில் அடங்கியுள்ளது.

கைத்தறிப் பிரிவு நாட்டின் பொருளாதாரத்தில் தனியொரு இடத்தைப்பெற்றுள்ளது. கைத்தறி நெசவு, விவசாயத்திற்கு அடுத்தப்படியாக மிகப்பெரிய பொருளாதார நடவடிக்கைகள் கொண்ட தொழில்களில் ஒன்றாகும். கைத்தறி தொழிலானது **43.31** இலட்சம் நெசவாளர்கள் மற்றும் அதன் சார்புடைய தொழிலாளர்களுக்கு, **23.77** இலட்சம் கைத்தறிகளின் மூலம் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது. இப்பிரிவு, நாட்டின்

மொத்த துணி உற்பத்தியில் ஏறத்தாழ 15 விழுக்காடு பங்களிப்பதுடன், நாட்டின் ஏற்றுமதி வருவாயிலும் பங்களிக்கிறது.

சுதந்திரம் அடைந்தது முதல், கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கும், மேம்படுத்துதலுக்கும் அரசு எண்ணற்ற திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்தி வருகிறது. பல்வேறு திட்டங்களான கைத்தறி குழும அணுகுமுறை, தீவிர சந்தைப்படுத்துதல் முயற்சி மற்றும் சமூக நல மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக கைத்தறித் தொழில் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி கண்டுள்ளதுடன், நெசவாளர்களின் வருமானமும் உயர்வதற்கு வழிவகை செய்துள்ளது.

கைத்தறித் தொழில் 3.19 இலட்சம் நெசவாளர்கள் மற்றும் 1.89 இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவர்களின் பொருளாதார நிலை உயர்வதற்கு வழிவகுப்பதன் மூலம் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் 2.56 இலட்சம் கைத்தறிகள் 1,156 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும், எஞ்சிய தறிகள் கூட்டுறவு அல்லாத அமைப்பிலும் இயங்கி வருகின்றன. மேற்படி 1,156 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில்,

1,067 சங்கங்கள் பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாகவும், மீதமுள்ள 89 சங்கங்கள் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாகவும் உள்ளன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பெரும்பாலும் நெசவாளர்கள் அதிகம் வாழும் கிராமங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ளன. மாநில மற்றும் மைய அரசின் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் அனைத்தும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.



**கைத்தறி**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 2016–2017–ஆம் ஆண்டில் ரூ.726.81 கோடி மதிப்புள்ள 828.07 இலட்சம் மீட்டர் கைத்தறி துணிகளை உற்பத்தி செய்து, ரூ.882.69 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன. 2016–2017–ஆம் ஆண்டில், 964 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபம் ஈட்டியுள்ளன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டிற்கு சந்தைப்படுத்துதல் முக்கிய காரணியாக விளங்குகிறது. கைத்தறி தயாரிப்புகளுக்கான சந்தைப்படுத்துதலை விரிவுபடுத்த, எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களையும் / ஏற்றுமதி இரகங்களையும் நுகர்வோர் விரும்பும் வகையில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் 2016–2017–ஆம் ஆண்டில் அதிக அளவில் வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## கைத்தறி நெசவுக்கு முந்தைய பணிகள்



பாவு ஓடுதலுக்கு முந்தையப் பணி



வீதியில் பாவு ஓடுதல்



கையால் பாவு ஓடுதல்



இயந்திரத்தின் மூலம் பாவு ஓடுதல்

மாவட்ட வாரியாக கைத்தறி துணி வகைகள்/ பகுதிகள்

| வ. எண் | மாவட்டம் | நெசவு நெய்யும் பகுதி | தயாரிப்புகள் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | சிறுமுகை, ஒண்டிபுதூர் | மென் பட்டு சேலைகள் |
| | | கோயம்புத்தூர், பொள்ளாச்சி, வதம்பச்சேரி | பருத்தி சேலைகள் |
| | | சிறுமுகை | கோரா பருத்தி சேலைகள் |
| 2 | கடலூர் | மோட்சகுளம், புவனகிரி | பட்டு சேலைகள் |
| | | திருமுட்டம் | வெங்கடகிரி பருத்தி சேலைகள் |
| | | குறிஞ்சிப்பாடி | பருத்தி கைலிகள் |
| | | நடுவீரப்பட்டு | கொசு வலை |
| 3 | திண்டுக்கல் | பழனி, சின்னாளப்பட்டி | செயற்கை பட்டு சேலைகள், கோரா பருத்தி சேலைகள், கட்டு சாய சேலைகள் |
| 4 | தருமபுரி | தருமபுரி | துண்டுகள் |
| 5 | ஈரோடு | ஈரோடு, சென்னிமலை, காஞ்சிக்கோவில், நசியனூர் | போர்வைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் |
| | | ஈரோடு, சென்னிமலை, காஞ்சிக்கோவில் | துண்டுகள் |
| | | ஈரோடு, சென்னிமலை | வீட்டு அலங்கார துணி வகைகள் |
| | | கோபிச்செட்டிப்பாளையம், தொட்டம்பாளையம் | கோரா பருத்தி சேலைகள் |

| வ. எண் | மாவட்டம் | நெசவு நெய்யும் பகுதி | தயாரிப்புகள் |
|---|---|---|---|
| 6 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், செவிலிமேடு, ஒரிக்கை, எலப்பாக்கம் | பட்டு சேலைகள் |
| | | பிள்ளையார்பாளையம், திருக்கழுக்குன்றம், அய்யம்பேட்டை, ஒரக்காட்டுப்பேட்டை, ஒலிமுகமதுப்பேட்டை | பருத்தி கைலிகள் |
| | | மானாம்பதி | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான வேட்டிகள் |
| | | எலப்பாக்கம் | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான சேலைகள் |
| 7 | கன்னியாகுமரி | வடசேரி, குளச்சல், பள்ளியாடி | பருத்தி வேட்டிகள், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான வேட்டிகள் |
| 8 | கரூர் | வெங்கமேடு, மண்மங்கலம் | போர்வைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் |
| | | கரூர், வெங்கமேடு | வீட்டு அலங்கார துணி வகைகள் |

| வ. எண் | மாவட்டம் | நெசவு நெய்யும் பகுதி | தயாரிப்புகள் |
|---|---|---|---|
| 9 | மதுரை | மதுரை, நிலையூர் | கோடம்பாக்கம் பருத்தி மற்றும் சுங்குடி சேலைகள் |
| | | டி. குன்னத்தூர் | பருத்தி கைலிகள் |
| | | மதுரை | செயற்கை பட்டு சேலைகள் |
| 10 | தேனி | ஆண்டிப்பட்டி | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான சேலைகள் |
| 11 | நாகப்பட்டினம் | மயிலாடுதுறை | கூறைநாடு பருத்தி மற்றும் பட்டு சேலைகள் |
| | | சிக்கல் | பட்டு சேலைகள் |
| 12 | நாமக்கல் | இராசிபுரம் | பட்டு மற்றும் பருத்தி சேலைகள் |
| | | ஆர்.புதுப்பாளையம், | பருத்தி சேலைகள் |
| | | மல்லசமுத்திரம், வெண்ணந்தூர் | பருத்தி வேட்டிகள் |
| | | எடப்பாடி | துண்டுகள் , தரை விரிப்புகள் |
| 13 | இராமநாதபுரம் | பரமக்குடி, எமனேஸ்வரம் | செயற்கை பட்டு சேலைகள் மற்றும் பருத்தி சேலைகள் |

| வ. எண் | மாவட்டம் | நெசவு நெய்யும் பகுதி | தயாரிப்புகள் |
|---|---|---|---|
| 14 | சேலம் | அம்மாப்பேட்டை, கொண்டலாம்பட்டி, வனவாசி | பட்டு சேலைகள், பட்டு வேட்டிகள், பட்டு அங்கவஸ்திரம், மற்றும் பட்டு சட்டைகள் |
| | | வனவாசி, தாரமங்கலம் | பருத்தி சேலைகள் |
| | | அம்மாப்பேட்டை, ஆட்டையாம்பட்டி | பருத்தி வேட்டிகள் |
| | | அயோத்தியாப்பட்டினம், கருங்கல்பட்டி, தாதகாபட்டி | போர்வைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் |
| | | பாப்பாரப்பட்டி, | கொசு வலைகள் |
| | | ஆட்டையாம்பட்டி | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான வேட்டிகள் |
| | | | விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்திற்கான கேஸ்மண்ட் துணிகள், துப்பட்டா |

| வ. எண் | மாவட்டம் | நெசவு நெய்யும் பகுதி | தயாரிப்புகள் |
|---|---|---|---|
| 15 | சிவகங்கை | காரைக்குடி | செட்டிநாடு பருத்தி சேலைகள் |
| 16 | தஞ்சாவூர் | திருபுவனம், கும்பகோணம், தாராசுரம், தஞ்சாவூர் | பட்டு சேலைகள் |
| | | ஜெயங்கொண்டம் | பருத்தி சேலைகள் |
| 17 | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி | போர்வை மற்றும் படுக்கை விரிப்புகள் |
| | | தென்காசி | துண்டுகள் |
| | | வீரவநல்லூார், பாளையங்கோட்டை | செயற்கை பட்டு சேலைகள் |
| 18 | திருவள்ளூர் | அம்மையார்குப்பம், வங்கனூர், பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான சேலைகள் |
| 19 | திருவண்ணாமலை | ஆரணி, கொருக்காத்தூர், ஒண்ணுபுரம் | பட்டு சேலைகள் |
| | | வந்தவாசி | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான சேலைகள் |

| வ. எண் | மாவட்டம் | நெசவு நெய்யும் பகுதி | தயாரிப்புகள் |
|---|---|---|---|
| 20 | திருவாரூர் | அம்மையப்பன், மன்னார்குடி | பட்டு சேலைகள் |
| 21 | திருப்பூர் | கணபதிபாளையம் | பட்டு சேலைகள், கோரா சேலைகள் |
| 22 | திருச்சி | உறையூர் | பருத்தி சேலைகள் |
| | | உறையூர், மணல்மேடு | பருத்தி வேட்டிகள் |
| 23 | வேலூர் | குடியாத்தம் | பருத்தி கைலிகள் |
| | | சோளிங்கபுரம், திருமால்பூர், குருவராஜப்பேட்டை, மின்னல் | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான சேலைகள் |
| 24 | விருதுநகர் | அருப்புக்கோட்டை | பருத்தி சேலைகள், பருத்தி கைலிகள் |
| | | ஸ்ரீவில்லிப்புத்தூர், சுந்தரபாண்டியம், ராஜபாளையம் | விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்திற்கான கேஸ்மண்ட் துணி, துப்பட்டா |

## <u>முக்கிய கைத்தறி இரகங்கள்</u>



சேலம் பட்டு சேலை



திருபுவனம் பட்டு சேலை



சேலம் வெண் பட்டு வேட்டி



ஈரோடு துண்டு



குடியாத்தம் கைலி



சென்னிமலை படுக்கை விரிப்பு


## (ஆ) விசைத்தறி பிரிவு

ஜவுளித் தொழிலில், பரவலாக்கப்பட்ட விசைத்தறி பிரிவு, துணி உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு வழங்குவதில் மிக முக்கிய பிரிவாக விளங்குகிறது. இப்பிரிவு, **61.72** இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதோடு, நாட்டின் மொத்த துணி உற்பத்தியில் **60** விழுக்காடு பங்களிக்கிறது. விசைத்தறி பிரிவில் ஏறத்தாழ **60** விழுக்காடு துணிகள் செயற்கை இழைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், ஏற்றுமதிக்கான துணி இரகங்களில் **60** விழுக்காட்டிற்கு மேல் விசைத்தறி பிரிவு மூலம் பெறப்படுகிறது. ஆயத்த ஆடைகள் மற்றும் வீட்டு உபயோக துணிப்பிரிவுகளின் துணித் தேவைகள் விசைத்தறித் தொழிலையே பெருமளவு சார்ந்துள்ளன.



**விசைத்தறி நெசவு கூடம்**

**தமிழ்நாட்டில் விசைத்தறி மிகுந்த பகுதிகள்**




இந்தியாவில் ஏறத்தாழ **24.69** இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. தொழில்நுட்ப கண்ணோட்டத்தின்படி, இப்பிரிவு சாதா விசைத்தறிகள் முதல் உயர்தொழில்நுட்பம் வாய்ந்த நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகள் வரை பல்வேறு நிலைகளில் மாறுப்பட்டுள்ளன. இப்பிரிவில் சுமார் **1.25** இலட்சம் நாடா

இல்லாத தறிகள் உள்ளன. 75 விழுக்காட்டிற்கும் மேலான சாதா விசைத்தறிகள் உபயோகப்படுத்த இயலாமலும், 15 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பில் இருந்து காலாவதியானதும் மற்றும் செயல்படாமல் அல்லது தர கட்டுப்பாடு அல்லது தர கட்டுப்பாட்டு சாதனங்கள்/இணைப்புகள் இல்லாமலும் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளன. இருப்பினும், சமீப காலங்களில் விசைத்தறிப் பிரிவு தொழில்நுட்ப திறனால் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், மக்களின் துணித் தேவைகளை பூர்த்தி செய்வதில் விசைத்தறிப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. விசைத்தறித் தொழிலில் பல்வேறு துணி ரகங்களான, காடா மற்றும் பதனிடப்பட்ட ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பிரிவில் துணிகளின் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல் ஆகியவை வேகமாக அதிகரித்து வருகிறது. இப்பிரிவு, நாட்டின் ஏற்றுமதி வருவாயை ஈட்டுவதில் கணிசமான பங்கினை வகிக்கிறது.



**விசைத்தறி தொழிலாளர்**

இந்தியாவில் மொத்தமுள்ள விசைத்தறிகளில், நான்கில் ஒரு பங்கு விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. நாட்டில் மொத்தமுள்ள **24.69** இலட்சம் விசைத்தறிகளில், தமிழ்நாட்டில் ஏறத்தாழ **5.67** இலட்சம் விசைத்தறிகளும், அவற்றுள் **55,870** விசைத்தறிகள் **211** விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பள்ளி சிறார்களுக்கான இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் துணிவகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. கடந்த

2016–2017–ஆம் ஆண்டில், ரூ.545.57 கோடி மதிப்புள்ள 1748.00 இலட்சம் மீட்டர் துணிகளை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்துள்ளன.

விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காக, விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இவ்வாண்டு சந்தையில் எளிதில் விற்பனை செய்யக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## (இ) நூற்பாலை பிரிவு

அமைப்பு சார்ந்த ஜவுளிப் பிரிவில் 3,367 சிறிய அளவிலான மற்றும் பெரிய அளவிலான நூற்பாலைகள் உள்ளன. தமிழகத்தின் நூற்பு பிரிவு நாட்டிலேயே பெரியதாகும். பெரும்பாலான நூற்பாலைகள் தனியாரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள 3,367 நூற்பாலைகளில், தமிழகத்தில் 2,013 நூற்பாலைகள் அமைந்துள்ளது. இதனால் தமிழகம் நூற்பு பிரிவில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இம்மாநிலத்தில் 6 கூட்டுறவு நூற்பாலைகளும், 7 தேசிய பஞ்சாலை கழக ஆலைகளும் இயங்கி வருகின்றன.



நூற்பு பிரிவு

மொத்தம் நிறுவப்பட்ட கதிர்களின் எண்ணிக்கையில், **52.39** மில்லியனுக்கும் மேற்பட்ட நூற்புக் கதிர்கள் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ளதன் மூலம் உலகிலேயே அதிக அளவு கதிர்களை நிறுவிய நாடாக இந்தியா திகழ்கிறது. அதில், **24** மில்லியன் நூற்புக் கதிர்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ **1,935** மில்லியன் கிலோகிராம் நூலினை உற்பத்தி செய்து வருகின்றது. இது தேசிய அளவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த நூல் அளவில் **34** விழுக்காடு ஆகும். **இந்தியாவில் பருத்தி நூல் மற்றும் இதர வகை நூல் உற்பத்தியில் தமிழ்நாடு முதன்மை இடத்தில் உள்ளது. மேலும், பருத்தி நூல் ஏற்றுமதியில் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.**

## (ஈ) ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடை பிரிவு

ஆயத்த ஆடை பிரிவானது உழைப்பு செறிந்த துறைகளில் ஒன்றாக திகழ்வதுடன் உலகச் சந்தையில் வளர்ந்துவரும் நாடுகள் நுழைவதற்கு வழிவகை செய்கிறது. இது நாட்டின் பொருளாதாரத்தை தொழில்மயமாக்குவதோடு மட்டுமல்லாமல் காலப்போக்கில் பொருட்கள் சார்ந்த மாறுதலுக்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது.

இந்திய துணைக் கண்டம், ஆயத்த ஆடை தயாரிப்பில் உலக அளவில் சீனாவை அடுத்து இரண்டாவது மிகப் பெரிய உற்பத்தியாளராக திகழ்கிறது. நாட்டின் பெரும்பாலான ஆயத்த ஆடை உற்பத்தி ஆலைகள் சிறிய மற்றும் நடுத்தர ஆலைகளாக உள்ளன. இந்தியா, ஆண்களுக்கான உயர்தர ஆடைகளுக்கு பிரசித்தி பெற்று விளங்குகிறது.

இந்தியாவின் ஆயத்த ஆடைத் தொழில் நன்முறையில் அமைக்கப்பெற்ற, உலகின் சிறந்த பிரிவுகளில் ஒன்றாகும். இப்பிரிவு வடிவமைப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், கொள்முதல் செய்பவர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியது. இந்திய ஆயத்த ஆடைப் பிரிவானது தரம், வடிவமைப்பு மற்றும் நீடித்த உழைப்பு ஆகியவற்றிற்கென உலகச் சந்தையில் தனக்கென மதிப்பு மிக்க ஒரு இடத்தை

பெற்றுள்ளது. நமது நாட்டில் விரைவான ஜவுளி ஏற்றுமதி தொழிலை மையப்படுத்தி அரசின் கொள்கைகள் அமைந்துள்ளதால், ஆடைத் தொழிலில் அதிக முதலீட்டிற்கான தகுந்த சூழ்நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

ஆயத்த ஆடைத் தொழிலானது வளர்ந்துவரும் பல நாடுகளின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்தியாவில் ஆயத்த ஆடை தொழில் 1.23 கோடி நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுடன், 36 இலட்சம் டன் ஆயத்த ஆடைகள் உற்பத்தியினை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் உள்ள மொத்த ஜவுளி ஏற்றுமதியில் ஆயத்த ஆடைகளின் பங்கு 43 விழுக்காடு ஆகும். இவற்றில் பருத்தி ஆடைகள், ஆடை சார்ந்த பொருட்கள், செயற்கை இழை ஆடைகள் மற்றும் இதர ஜவுளி ஆடைகள் அடங்கும். கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் ஆயத்த ஆடைத் தொழில் வெகு விரைவாக வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலின் ஆயத்த ஆடைப்பிரிவு முதன்மையான மற்றும் வளர்ந்து வரும் ஒரு முக்கிய பிரிவாகும். ஒருங்கிணைந்த பின்னலாடை பிரிவிற்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டின் ஆயத்த ஆடை பிரிவின் நிலைத்தன்மை கவனத்தை ஈர்க்கும் மையமாக உள்ளது. இந்தியாவில் மொத்தமுள்ள 13,000 பின்னலாடை

நிறுவனங்களில் **6,500** நிறுவனங்கள் திருப்பூர் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ளதுடன், **6** இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றன. **2016–2017–**ஆம் ஆண்டில் திருப்பூரில் மட்டும் **80** இலட்சம் ஆயத்த ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன. திருப்பூரில் முன்பு எப்பொழுதும் இல்லாத வகையில் **2016–2017–**ஆம் ஆண்டில் ரூ.**36,000** கோடி மதிப்பிற்கு உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி வணிகம் நடைபெற்றுள்ளது. **2016–2017-**ஆம் ஆண்டில் திருப்பூர் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பின்னலாடை ஏற்றுமதி வளர்ச்சி விகிதம் **15.50** விழுக்காடு அதிகரித்துள்ளது.



**ஆயத்த ஆடை பிரிவு**



பின்னலாடை பிரிவு

(உ) பதனிடும் பிரிவு

ஜவுளி உற்பத்தி தொழில், நூலிழையினை நூலாகவும், நூலினை துணியாகவும், துணி சாயம் ஏற்றப்பட்டு அல்லது அச்சிடப்பட்டு ஆடையாகவும் வடிவமைக்கப்படுவதை உள்ளடக்கியுள்ளது. துணி பதனிடுதலை 3 இனங்களாக பிரிக்கலாம். அதாவது, பதனிடுவதற்கு தயார் செய்தல், வண்ணம் ஏற்றுதல் மற்றும் இறுதி செய்தல்.

துணிநூல் பதனிடுதல் என்பது சாயம் ஏற்றுதல், அச்சிடுதல் மற்றும் ஆடை தயாரிப்பதற்கு முந்தைய இதர

பதப்படுத்துதல் பணிகளை உள்ளடக்கியதாகும். இப்பிரிவு, அதிக எண்ணிக்கையிலான தனிப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இந்திய அளவில் சுமார் 2,300 துணி பதனிடும் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 2,100 தனிநபர் அலகுகளாகவும், சுமார் 200 அலகுகள் நூற்பு, நெசவு அல்லது பின்னாலாடை செயல்களுடன் ஒருங்கிணைந்த துணி பதனிடும் நிறுவனங்களாகவும் உள்ளன. மேலும், இந்தியாவில் சுமார் 27,000 உற்பத்தியாளர்கள், 48,000 ஒப்பந்ததாரர்கள் மற்றும் 1,000 ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் உள்ளனர்.



**பதனிடும் அலகு**

தமிழ்நாட்டில் துணி பதனிடும் துறையானது, கையால் பதனிடும் நிறுவனங்கள், பகுதியாக மின்விசை மூலம் பதனிடும் நிறுவனங்கள், மின்விசை மூலம் பதனிடும் ஆலைகள் மற்றும் நெசவு / நூற்பாலையுடன் ஒருங்கிணைந்த துணி பதனிடும் ஆலைகள் என 4 பிரிவுகளாக உள்ளன.

பதனிடுதல் பிரிவு ஜவுளித் துறையின் மதிப்புக் கூட்டப்பட்ட மிக முக்கியமான பிரிவாகும். பதனிடும் பிரிவானது, துணியின் மதிப்பு, தரம் மற்றும் புதுமை புகுத்துதலுக்கான மிகப் பெரிய வாய்ப்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான துணிகளின் மீது ஏற்பட்ட தாக்கம் ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது.

## 3. கைத்தறி மற்றும் துணிநூல் துறை

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயங்கி வருகிறது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் இத்துறையின் தலைவராகவும், இவருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு நிலைகளில் அலுவலர்களும், சரக அளவில் துணை / உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளித் தொழில் தொடர்புடைய இதர பிரிவுகளின் இணக்கமான மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதே கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கமாகும். இத்துறை, தொழில் சார்ந்த அனைத்து பிரிவினர் நலனுக்காகவும், குறிப்பாக, கைத்தறி நெசவாளர்கள் மற்றும் ஜவுளி தொழிலாளர்களின் நலனுக்காகவும் செயல்பட்டு வருகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை நெசவாளர்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அரசின் கொள்கைகள், செயல் திட்டங்கள் மற்றும் திட்டங்களின் பயன்கள் தேவையான நெசவாளர்களுக்கும் மற்றும் இதர தொழில் சார்புடையோருக்கும் சென்றடைவதை பல்வேறு சரக துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலம் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் உறுதி செய்து செயல்படுத்துகிறார்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு “செயற்பதிவாளராக” தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், **1983** மற்றும் **1988**–ஆம் ஆண்டைய விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில்

செயல்பட்டு வருகிறார். மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் "மாநில துணிநூல் அதிகாரி"யாகவும் செயல்படுவதால், நூற்பாலைகள் மற்றும் துணிநூல் ஆலைகள், பதனிடும் ஆலைகள், ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை அலகுகள் ஆகியவை சீராக செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் உள்ளது.

கைத்தறித் தொழில் சார்ந்த அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்தல், நூல் மற்றும் துணிகளின் உற்பத்தியினை அதிகரித்து நியாய விலையில் கிடைக்கச் செய்தல் போன்ற ஒட்டுமொத்தப் பொறுப்பும் இத்துறைக்குள்ளது. கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் நிறுவனங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்கள் விநியோகம் மற்றும் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் விற்பனைக்கு தயாராக உள்ள ஜவுளிகள் இணையதள வணிகம், சொந்த விற்பனை நிலையங்கள், முகவர் விற்பனை நிலையங்கள், கோ–ஆப்டெக்ஸ் மற்றும் “லூம்வேர்ல்டு” விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிறப்பு கவனம் செலுத்தும் பொறுப்பும் இத்துறைக்குள்ளது. மத்திய, மாநில அரசுகளின் அனைத்து திட்டங்களை

செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பொறுப்புகளும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையைச் சார்ந்ததாகும்.

**3.1 கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:–**

**3.1.1 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அலுவலகங்கள்**

| வ. எண் | சரகத்தின் பெயர் | வ. எண் | சரகத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் (துணை இயக்குநர்) | 11 | திருவள்ளூர் |
| 2 | சேலம் (துணை இயக்குநர்) | 12 | ஈரோடு |
| 3 | வேலூர் | 13 | திருப்பூர் |
| 4 | திருவண்ணாமலை | 14 | கோயம்புத்தூர் |
| 5 | கடலூர் | 15 | திண்டுக்கல் |
| 6 | கும்பகோணம் | 16 | மதுரை |
| 7 | திருவாரூர் | 17 | பரமக்குடி |
| 8 | திருச்சிராப்பள்ளி | 18 | விருதுநகர் |
| 9 | கரூர் | 19 | திருநெல்வேலி |
| 10 | திருச்செங்கோடு | 20 | நாகர்கோவில் |

### 3.1.2 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985–ஐ செயல்படுத்தும் அமலாக்க அலுவலகங்கள்

| வ. எண் | அமலாக்க அலுவலகத்தின் பெயர் |
|---|---|
| 1 | துணை இயக்குநர் (அமலாக்கம்), சென்னை |
| 2 | உதவி அமலாக்க அலுவலகம், சேலம் |
| 3 | உதவி அமலாக்க அலுவலகம், திருச்செங்கோடு |
| 4 | உதவி அமலாக்க அலுவலகம், ஈரோடு |
| 5 | உதவி அமலாக்க அலுவலகம், திருப்பூர் |
| 6 | உதவி அமலாக்க அலுவலகம், மதுரை |

### 3.1.3 கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் உள்ள நிறுவனங்கள்

1) 1,156 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

2) 211 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

3) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை

4) 6 கூட்டுறவு நூற்பாலைகள் - [அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை (அறந்தாங்கி), கன்னியாகுமரி (ஆரல்வாய்மொழி), கிருஷ்ணகிரி (ஊத்தங்கரை) மற்றும் இராமநாதபுரம் (அச்சங்குளம்)]

5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

6) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை

7) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

8) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

9) தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

## 4. துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் மாநில அளவிலான குறிப்பிடத்தக்க திட்டங்கள்

### 4.1 விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

தமிழக அரசு, விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை 1983-ஆம் ஆண்டு மிக சீரியத் திட்டங்களில் ஒன்றாக அறிமுகப்படுத்தியது. இத்திட்டம், பொங்கல் பண்டிகையின் போது மக்களுக்கு விலையில்லா வேட்டி சேலைகள் விநியோகம் செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 14,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 49,000 விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதுடன், தமிழகத்தில் கிராமப்புறம் மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் 3.22 கோடி மக்களின் துணித் தேவையினையும் பூர்த்தி செய்கிறது.



விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள்



பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படும்
விலையில்லா சேலைகள்

அரசு இத்திட்டத்தினை பொங்கல் 2017–ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு, 2016–2017–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.487.45 கோடி ஒதுக்கீடு செய்து வழங்கியது. இத்திட்டத்திற்கு தேவையான நூலினை கொள்முதல் செய்தல் மற்றும் வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யும் பணிகளை துறை மேற்கொண்டது. உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, சேலைகளை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்தல் மற்றும் வருவாய்த்துறைக்கு அனுப்புதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள கொள்முதல் முகமை நிறுவனங்களாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் (TNTC) ஆகிய நிறுவனங்கள் நியமனம் செய்யப்பட்டது. பொங்கல் 2017-ஆம் ஆண்டுக்கு பயனாளிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு, 160.21 இலட்சம் சேலைகள் மற்றும் 159.98 இலட்சம் வேட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

இத்திட்டம் 2017–2018–ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.490.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2 பள்ளி சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்குதல்**

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் 1-ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை 1985–1986–ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நான்கு இணை சீருடைத் துணிகள் 2012–2013–ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 10,000 கைத்தறி நெசவாளர்களுக்கும், 53,000 விசைத்தறி நெசவாளர்களுக்கும் தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு தேவையான சீருடைத் துணி இரகங்களான மெரூன் டிரில், மெரூன் கேஸ்மெண்ட், லைட் பிரௌன் துப்பட்டா, லைட் பிரௌன் சர்ட்டிங் மற்றும் மெரூன் சர்ட்டிங் இரகங்கள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2016–2017–ஆம் கல்வியாண்டில் 543.27 இலட்சம் மீட்டர் சீருடைத்துணி இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, சமூக நலத்துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும்

பொருட்டு அரசு ரூ.276.40 கோடி ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.





**புதிய விலையில்லா சீருடையில் உற்சாகத்துடன் மாணாக்கர்கள்**

விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை 2017–2018–ஆம் கல்வியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட, அதற்கான முன்பணமாக ரூ.49.79 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன்படி, இத்திட்டத்திற்கு தேவையான சீருடைத்துணிகளை உற்பத்தி மேற்கொள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது. முதல் மற்றும் இரண்டாம் இணைக்கான சீருடைத் துணிகள் விநியோகம் நிறைவடைந்துள்ளது. மூன்றாவது மற்றும் நான்காவது இணைக்கான சீருடைத் துணிகளின் விநியோகம் ஆகஸ்ட் திங்களில் நிறைவடையும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு தேவையான சீருடைத் துணிகளையும், இத்துறையே வழங்கி வருகிறது.



சீருடைத் துணியில் ஜிகர் சாயம் ஏற்றுதல்



சீருடைத் துணியினை உலர வைத்து பதப்படுத்துதல்

2017–2018–ஆம் கல்வி ஆண்டிற்கு பல்வேறு துறைகளுக்கான சீருடைத் துணி தேவை அளவு பின்வருமாறு :-

| துறையின் பெயர் | மொத்த சீருடைத் துணி தேவை (இலட்சம் மீட்டரில்) | பயனாளி மாணக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சமூக நலத்துறை | 543.27 | 44,31,000 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 3.54 | 19,003 |
| பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ( 4–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் விடுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை சார்ந்த மாணவர்கள்) | 3.71 | 20,298 |
| ஆதிதிராவிடர் நலத்துறை (9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்) | 13.50 | 67,043 |
| **மொத்தம்** | **564.02** | **45,37,344** |

## 4.3 தள்ளுபடி மானியத் திட்டம்


தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தால் (கோ–ஆப்டெக்ஸ்) விற்பனை செய்யப்படும் கைத்தறி துணி வகைகளை சந்தையில் போட்டியிட்டு விற்பனையினை மேம்படுத்த ஏதுவாக, தள்ளுபடி மானியத் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சரக்கு இருப்பினை குறைக்க உதவியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை தொடர்ந்து வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கைத்தறி துணிகளின் சில்லறை விற்பனை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியமாக மாநில அரசு வழங்குகிறது. பருத்தி ரகங்களுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.100/- உருப்படி ஒன்றுக்கு இதில் எது குறைவோ அத்தொகையும் மற்றும் பட்டு ரகங்களுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.200/– இதில் எது குறைவோ

அத்தொகையும் தள்ளுபடி மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் **15–ஆம்** தேதி முதல் ஜனவரி மாதம் **31–ஆம்** தேதி வரை **139** நாட்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் **20** விழுக்காடு தள்ளுபடி மானியத்துடன் கூடுதலாக **10** விழுக்காடு தள்ளுபடி மானியம், அதாவது **30** விழுக்காடு தள்ளுபடி மானியத்தை அனுமதித்து வருகிறது. இந்த சிறப்புத் தள்ளுபடி மானியத்தின் கீழ் **30** விழுக்காடு அல்லது உருப்படி ஒன்றுக்கு ரூ.**150/–** இதில் எது குறைவோ அத்தொகை பருத்தி ரகங்களுக்கும் மற்றும் **30** விழுக்காடு அல்லது உருப்படி ஒன்றுக்கு ரூ.**300/–** இதில் எது குறைவோ அத்தொகை பட்டு ரகங்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது. **2016–2017–ஆம்** ஆண்டில் **30** விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மானிய திட்டத்தின்கீழ் ரூ.**313.64** கோடி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2016–2017–ஆம்** ஆண்டில், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) தள்ளுபடி மானியமாக ரூ.**80** கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

தள்ளுபடி மானியத் திட்டத்தை 2017–2018–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**கைத்தறி துணி விற்பனைக்கு வழங்கப்பட்ட தள்ளுபடி மானியம்**

### 4.3.1 பட்டு இரகங்களுக்கான 15 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மானியம்

பட்டுத்துணி இரகங்களின் விற்பனையை அதிகரிக்கவும், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) பட்டு இரகங்களின் அதிக அளவிலான இருப்பினை குறைத்திடவும், கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பினை உறுதி செய்யவும், 31.03.2015 அன்று இருப்பில் இருந்த பட்டு இரகங்களுக்கு 15 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மானியத்தினை வழங்க மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக அரசு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதனடிப்படையில், 31.03.2017 முடிய ரூ.55.25 கோடி அளவிற்கு பட்டு துணிவகைகள் விற்பனை மேற்கொள்ளப்பட்டு, சிறப்புத் தள்ளுபடி மானியமாக ரூ.6.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 4.4 வட்டி மானியத் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்திற்கான காசுக் கடன் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகின்றது. தொடக்க

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் காசுக்கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிச் சுமையினைக் குறைக்கும் நோக்கத்திலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தடையில்லா நெசவுப் பணி மேற்கொள்ளவும், வட்டி மானியத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் காசுக்கடன் தொகைக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் நிர்ணயிக்கப்படும் வட்டி விகிதத்தில், வட்டி மானியமாக 4 விழுக்காடு வட்டித் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. வட்டி மானியத் தொகை ஒவ்வொரு மாதமும் இயக்குநரால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2016–2017–ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.10.50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.


இத்திட்டத்தை, 2017–2018–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.5 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

நெசவாளர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்து அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக தமிழக அரசால் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமானது 1975-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரு நெசவாளர் தாம் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால், அதற்கு ஈடாக, மாநில அரசு தனது பங்காக, நெசவாளர் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் வழங்குகிறது.

நெசவாளர்களால் செலுத்தப்படும் ரூபாய் ஒன்றிற்கு எட்டு பைசா மற்றும் மாநில அரசால் செலுத்தப்படும் ரூபாய் ஒன்றிற்கு எட்டு பைசா தொகையும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டக் கணக்கிலுள்ள இருப்பு தொகைக்கு மாநில அரசு 9.50 விழுக்காடு வட்டி வழங்கி வருகிறது. அதில், 6.50 விழுக்காடு வட்டித்தொகை திட்டக் கணக்கில்

செலுத்தப்பட்டு, நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டும், எஞ்சிய 3 விழுக்காடு வட்டித்தொகை நலத்திட்டங்களான தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஒய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஒய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது.




**நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டு இறுதியில் உள்ள நெசவாளர்களின் எண்ணிக்கை**

இத்திட்டத்தின் கீழ், உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள 71,977 நெசவாளர்களுக்கு, 2015–2016–ஆம் ஆண்டில் நெசவாளர்கள் தனது பங்காக செலுத்திய தொகைக்கு ஈடாக

மாநில அரசு 2016–2017–ஆம் ஆண்டில் ரூ.10.39 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் வைப்புக் கணக்கில் உள்ள தொகைக்கு 2015-2016–ஆம் ஆண்டுக்கான 9.50 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.26.06 கோடியினை மாநில அரசு 2016–2017–ஆம் ஆண்டில் விடுவித்துள்ளது.


இத்திட்டம் 2017–2018-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.11.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.6 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழக அரசு கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்காக முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினை 1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற தகுதி பெறுகின்றனர். நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் தொகையை அரசு 01.01.2012 முதல் மாதம் ஒன்றுக்கு

ரூ.400—லிருந்து ரூ.1000/—ஆக உயர்த்தி வழங்கி வருகிறது. இதில், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.200/—உம் மீதமுள்ள தொகை ரூ.800/— அரசு கணக்கிலிருந்தும் நெசவாளர் முதியோர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

அரசு, 2016—2017—ஆம் ஆண்டில் நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் நெசவாளர் குடும்ப ஓய்வூதியத்திற்கென ரூ.22.75 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 22,370 முதியோர் ஓய்வூதிய பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.





**முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை**

இத்திட்டம், 2017–2018–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.23.89 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.7 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஒய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஒய்வூதியத் திட்டமானது 1992-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர் 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுதாரருக்கு குடும்ப ஒய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ.1000/– வீதம் 10 வருடங்களுக்கு அல்லது நெசவாளர் உயிருடன் இருந்திருந்தால் 60 வயது எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் எது நெசவாளரின் குடும்பத்திற்கு அதிக பயனளிக்குமோ, அவ்வகையில் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு மாதம் ஒன்றுக்கு நெசவாளர் குடும்ப ஒய்வூதியத் தொகையாக வழங்கப்படும் ரூ.1000/–ல், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.350/–ம், மீதமுள்ள தொகை ரூ.650/– அரசு கணக்கிலிருந்தும் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

2016–2017–ஆம் ஆண்டு **1,458** இறந்த நெசவாளர்களின் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். **2017–2018**–ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.




**குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை**

## 4.8 கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களுக்கு **100** யூனிட்டுகள் வரை (இரு மாதங்களுக்கு) விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை **22.05.2016** வரை தமிழ்நாடு அரசு தொடர்ந்து

செயல்படுத்தி வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **2016–**ஆம் ஆண்டைய சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை விலையில்லாமல் வழங்கி வரும் மின்சாரத்தினை **100** யூனிட்களிலிருந்து **200** யூனிட்டுகளாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு நிலை கட்டணத்துடன் **200** யூனிட்டுகள் மின்சாரம் **23.05.2016** முதல் விலையில்லாமல் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் **1,20,968** கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

கைத்தறி நெசவாளர்களுக்கு, விலையில்லா மின்சாரம் வழங்குவதற்காக, **2016–2017–**ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ரூ.**2.52** கோடி அரசால் ஒப்பளிப்பு செய்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் **2017–2018–**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**1.68** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.9 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் கூடிய மின்சாரம் வழங்குதல்


விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்டுகள் வரை (இரு மாதங்களுக்கு) விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை 22.05.2016 வரை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2016-ஆம் ஆண்டைய சட்டமன்ற தேர்தல் அறிக்கையில், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை விலையில்லாமல் வழங்கி வரும் மின்சாரத்தினை 500 யூனிட்களிலிருந்து 750 யூனிட்டுகளாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு நிலை கட்டணத்துடன் 750 யூனிட்டுகள் மின்சாரம் 23.05.2016 முதல் விலையில்லாமல் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 1,06,432 விசைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

விசைத்தறி நெசவாளர்களுக்கு, 751 யூனிட் மற்றும் அதற்கு அதிகமாக பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு தமிழக அரசால் பின்வரும் அட்டவணைப்படி மானியம் வழங்கப்படுகிறது:-

| யூனிட் | ஒரு யூனிட் மின் கட்டணம் | ஒரு யூனிட்டுக்கு அரசு வழங்கும் மானியம் | ஒரு யூனிட்டுக்கு நெசவாளர்கள் செலுத்தும் மின் கட்டணம் |
|---|---|---|---|
| | (தொகை ரூபாயில்) | | |
| 1–500 | 5.20 | 5.20 | இலவசம் |
| 501–750 | 5.75 | 5.75 | இலவசம் |
| 751–1000 | 5.75 | 3.45 | 2.30 |
| 1001–1500 | 5.75 | 2.30 | 3.45 |
| 1500-க்கு மேல் | 5.75 | 1.15 | 4.60 |

விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குவதற்காக **2016–2017**–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ரூ.**385.91** கோடி அரசு ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

இத்திட்டம் **2017–2018**–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**405.21** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மின்சாரம்**

## 4.10 டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்குதல்

டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையானது, நெசவாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் விதமாக 1986–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும், முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெறும் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகளுக்கு 33 பாடப்பிரிவுகளில் அவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் காலம் வரை உதவித் தொகை

வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் **132** மாணாக்கர்கள் **(66** மாணவர்கள் மற்றும் **66** மாணவிகள்) உதவித் தொகை பெறுகின்றனர்.

**33** பாடப்பிரிவுகளில் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | படிப்பு | கல்வித் தகுதி | ஆண்டு | முதல் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை | இரண்டாம் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய்) | |
| 1. | எம்.பி.பி.எஸ். | +2 | 5 | 7,500 | 5,000 |
| 2. | பி.டி.எஸ். | +2 | 5 | 7,500 | 5,000 |
| 3. | பி.வி.எஸ்.சி. | +2 | 5 | 7,500 | 5,000 |
| 4. | எம்.எஸ். (துகவல் தொழில்நுட்பம்) | +2 | 5 | 7,500 | 5,000 |
| 5. | பி.ஈ. | +2 | 4 | 7,500 | 5,000 |
| 6. | பி.டெக். | +2 | 4 | 7,500 | 5,000 |
| 7. | பி.எஸ்சி. வேளாண்மை / தோட்டக்கலை | +2 | 4 | 4,000 | 2,500 |
| 8. | பி.பார்ம் | +2 | 4 | 4,000 | 2,500 |
| 9. | பி.எஸ்.சி. (நர்சிங்) | +2 | 4 | 4,000 | 2,500 |
| 10. | எம்.ஈ. | பி.இ. | 2 | 5,000 | 3,500 |
| 11. | எம்.டெக். | பி.இ /பி.டெக் | 2 | 5,000 | 3,500 |
| 12. | எம்.டி. | எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ். | 2 | 5,000 | 3,500 |
| 13. | எம்.எஸ். | எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ். | 2 | 5,000 | 3,500 |
| 14. | எம்.காம். | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 15. | எம்.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |

| வ. எண் | படிப்பு | கல்வித் தகுதி | ஆண்டு | முதல் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை | இரண்டாம் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய்) | |
| 16. | எம்.எஸ்சி. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 17. | எம்.பி.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 18. | எம்.சி.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 19. | பி.ஏ. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 20. | பி.எஸ்சி. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 21. | பி.காம். | +2 | 3 | 4,000 | 2,500 |
| 22. | பி.பி.ஏ. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 23. | பி.பி.எம். | +2 | 3 | 4,000 | 2,500 |
| 24. | பி.சி.ஏ. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 25. | பி.எஸ்சி (கணினி அறிவியல்) | +2 | 3 | 4,000 | 2,500 |
| 26. | பாலிடெக்னிக் | 10ஆம் வகுப்பு | 3 | 4,000 | 2,500 |
| 27. | இ.ஆ.ப./இ.கா.ப. வங்கி அலுவலர் தேர்வு | பட்டப்படிப்பு | 1 | 4,000 | 2,500 |
| 28. | ஹோட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் தொழில் நுட்பம் | +2 | 3 | 4,000 | 2,500 |
| 29. | விலை மதிப்பீட்டுக் கணக்கியல் | பட்டப்படிப்பு | 3 | 4,000 | 2,500 |
| 30. | கைத்தறி தொழில்நுட்ப பயிற்சி (டிப்ளமோ) | +2 | 3 | 4,000 | 2,500 |
| 31. | பிசியோதெரபி (டிப்ளமோ) | +2 | 2 | 4,000 | 2,500 |

| வ. எண் | படிப்பு | கல்வித் தகுதி | ஆண்டு | முதல் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை | இரண்டாம் நிலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய்) | |
| 32. | +2 அதிக மதிப்பெண் | +2 | 1 | 4,000 | 2,500 |
| 33. | 10ஆம் வகுப்பு அதிக மதிப்பெண் | 10ஆம் வகுப்பு | 1 | 4,000 | 2,500 |

இத்திட்டம் 2017–2018–ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## 4.11 கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்கள்

கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறி நெசவு, சாயப்பயிற்சி, வடிவமைப்பு, சித்திரப்பூ வேலைப்பாடு மற்றும் துணிகளில் சிறப்பு வேலைப்பாடு ஆகியவற்றில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் வண்ணம், ஈரோட்டில் கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் ரூ.25.71 இலட்சம் மதிப்பீட்டில் தமிழக அரசு நிறுவியுள்ளது. மேலும், கும்பகோணம், காஞ்சிபுரம் மற்றும் பரமக்குடி ஆகிய மூன்று இடங்களிலும் “கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்கள்” தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி மையங்களில் வகுப்பறைப் பயிற்சி மற்றும் செய்முறைப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் கைத்தறி நெசவாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. வகுப்பறைப் பயிற்சியில், தறி வகைகள், நூல் வகைகள் மற்றும் தரம், நெசவுத்

தொழில்நுட்பம் ஆகியவற்றிலும், செயல்முறைப் பயிற்சியில் மோடா இரக துணி நெசவுப் பயிற்சி, சன்ன இரக துணி நெசவுப் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட ஜக்கார்டு தறியில் நெசவுப் பயிற்சி ஆகியவற்றிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி மையங்களில் புதிய இரகங்களுக்கு மாறுவதற்கான நெசவு பயிற்சி அளிக்கப்படுவதால் கைத்தறி நெசவாளர்களின் வருமானம் அதிகரிப்பதுடன் விற்பனையும் உயர்கிறது. நெசவுத் தொழிலில் இளம்தலைமுறையினரை ஆர்வத்துடன் ஈடுபடுத்துவதே இப்பயிற்சி மையங்களின் முக்கிய நோக்கமாகும்.

தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு:-

| வ. எண் | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) | இதுவரை பயிற்சி பெற்றுள்ள பயிற்சியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், ஈரோடு. | 25.71 | 1252 |
| 2. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், கும்பகோணம். | 46.09 | 960 |
| 3. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், காஞ்சிபுரம். | 46.09 | 847 |
| 4. | வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், பரமக்குடி. | 54.28 | 1320 |
| மொத்தம் | | 172.17 | 4379 |

## 4.12 இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகம் கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்பத்தில் மூன்று ஆண்டு பட்டயப் படிப்பினை நடத்தி வருகிறது. கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் விதமாக, மூன்று ஆண்டு பட்டயப் படிப்பிற்கு மாணாக்கர்கள் தேர்வு செய்யப்படும்போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், தமிழக அரசு சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்பத்தில் மூன்று ஆண்டுகள் பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்காணும் விபரப்படி கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது:–

| ஆண்டு | உதவித் தொகை (ஒரு மாதத்திற்கு) | மைய அரசின் 50 விழுக்காடு பங்கு (ஒரு மாதத்திற்கு) | தமிழக அரசின் 50 விழுக்காடு பங்கு (ஒரு மாதத்திற்கு) |
|---|---|---|---|
| | (தொகை ரூபாயில்) | | |
| முதலாம் ஆண்டு | **1,000** | **500** | **500** |
| இரண்டாம் ஆண்டு | **1,100** | **550** | **550** |
| மூன்றாம் ஆண்டு | **1,200** | **600** | **600** |

இதுதவிர, எதிர்பாராச் செலவினம், கூடுதல் கல்வி உதவித் தொகை மற்றும் புத்தகப்படியாக ஆண்டொன்றுக்கு தலா ரூ.1,000/– வழங்கப்படுகிறது. மேலும் இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு கல்விச் சுற்றுலாவிற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,000/–ம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு திட்டப் பணிகளுக்கான உதவித் தொகை ரூ.500/–ம் வழங்கப்படுகிறது. தமிழக அரசால் இக்கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

தமிழக அரசு இடஒதுக்கீட்டில் கர்நாடக மாநிலத்திலுள்ள கடாக், ஆந்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள வெங்கடகிரி மற்றும் கேரள மாநிலத்திலுள்ள கண்ணூர் ஆகிய இடங்களிலுள்ள கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 4.13 சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்து பன்னாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை அதிகரிப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள சிறந்த

ஏற்றுமதியாளர்களுக்கு **1975–**ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு பரிசு வழங்கி வருகிறது.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே ஏற்றுமதி இரக உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு ரூ.**1.00** இலட்சம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016–**ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் (கோ–ஆப்டெக்ஸ்) தமிழகத்தைச் சார்ந்த மூன்று சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கும் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**2016–2017**-ஆம் ஆண்டிற்கான சிறந்த ஏற்றுமதி–யாளர்களுக்கான விருது வழங்கப்படவுள்ளது.

இத்திட்டம் **2017–2018–**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.**1.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.14 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்**

பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்தில் மேற்படி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சிறந்த வடிவமைப்புகளுக்காக வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| **முதல் பரிசு** | **ரூ.5,000/–** |
| **இரண்டாம் பரிசு** | **ரூ.3,000/–** |
| **மூன்றாம் பரிசு** | **ரூ.2,000/–** |

இத்திட்டத்தின் கீழ் **2016–2017**-ஆம் ஆண்டில் பருத்தி மற்றும் பட்டுத் துணி இரகங்களில் புதிய சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கிய **57** கைத்தறி நெசவாளர்களுக்கு முதல் பரிசு தொகையாக ரூ**5000/–**ம், இரண்டாம் பரிசு தொகையாக ரூ.**3000/–**ம் மற்றும் மூன்றாம் பரிசு தொகையாக ரூ.**2000/–**ம் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் **2017–2018–**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.15 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்

நெசவு சமூகத்தின் நலனை உறுதி செய்யும்பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு தொழிலாளர் வாரியம் உட்பட **9** நலவாரியங்கள் **2000–2001**–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டுத் தொழிலாளர் நல வாரியம் **21.07.2004** முதல் தமிழ்நாடு உடல் உழைப்பு வாரியத்துடன் இணைக்கப்பட்டது. இதன் பின்னர் அரசாணைப்படி இந்த வாரியம் தொழிலாளர் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் **01.09.2006** முதல் தனியே செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். இந்த வாரியத்தில் ஏழு அரசுப்பிரதிநிதிகள், ஏழு தொழில் அளிப்பவர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆறு தொழிலாளர் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த வாரியத்தால் நிதியுதவி, கல்வி உதவி தொகை, இயற்கை மரணம் / விபத்து / உடல் ஊனம் ஆகியவைகளுக்கான காப்பீடு அளிக்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | விவரம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து காப்புறுதி<br>அ) விபத்தால் மரணம் | 1,00,000 |
| | ஆ) விபத்தால் ஊனம் (ஊனத்தின் தன்மையை பொருத்து) | 1,00,000 வரை |
| | இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | |
| 2 | இயற்கை மரணம் | 15,000 |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 2,000 |
| 4 | கல்வி உதவி | |
| | i) 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | iii) 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | iv) 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,500 |
| | v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | vi) இளநிலை பட்டப்படிப்பு | 1,500 |
| | vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 1,750 |
| | viii) முதுநிலை பட்டப்படிப்பு | 4,000 |
| | ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 5,000 |
| | x) தொழில்நுட்ப படிப்பு | 4,000 |
| | xi) தொழில்நுட்ப படிப்பு (விடுதி) | 6,000 |

| வ.எண் | விவரம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| | xii) தொழில்நுட்ப மேற்படிப்பு | 6,000 |
| | xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி) | 8,000 |
| | xiv) ஐடிஐ / பட்டயப்படிப்பு | 1,000 |
| | xv) ஐடிஐ / பட்டயப்படிப்பு (விடுதி) | 1,200 |
| 5 | திருமண உதவி அ) ஆண்<br>ஆ) பெண் | 3,000<br>5,000 |
| 6 | மருத்துவ உதவிகள் | |
| | i) மகப்பேறு உதவி | 6,000 |
| | ii)கருக்கலைப்பு /கருச்சிதைவு | 3,000 |
| | iii) மூக்குக்கண்ணாடிக்கான உதவி | 500 வரை |
| 7 | ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 1,000 |

இந்நலவாரியத்தில் 2,79,722 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை, இவ்வாரியத்தின் மூலம் 2,67,142 நெசவாளர்களுக்கு மொத்தம் ரூ.67.11 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2016–2017–ஆம் ஆண்டில் 11,641 பயனாளிகளுக்கு ரூ.6.26 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 4.16 தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைபடுத்துதல்) சட்டம் 1982–இன் கீழ் **"தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்"** என்ற அமைப்பினை தமிழக அரசு உருவாக்கியது. இந்த நலவாரியத்தின் மூலம் விபத்து காப்பீட்டுத் தொகை, இயற்கை மரணத்திற்கான காப்பீட்டுத் தொகை, ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கண் கண்ணாடி வாங்க உதவித்தொகை வழங்குவதுடன் ஓய்வூதிய பயன் போன்ற உதவித்தொகைகள் விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில், இதுவரை **1,58,565** விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, **31.03.2017** முடிய **1,22,663** பயனாளிகளுக்கு ரூ.**29.38** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**2016–2017**–ஆம் ஆண்டில் **5,026** விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு **8,280** பயனாளிகளுக்கு ரூ.**3.28** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**4.17 2016–2017-ஆம் ஆண்டைய தமிழ்நாடு புதுமை முயற்சிகள் ஊக்குவிப்புத் திட்டம் செயலாக்கம்**

அரசு, 2015-2016–ஆம் ஆண்டில் “தமிழ்நாடு புதுமை முயற்சிகள் ஊக்குவிப்புத் திட்டத்தை” அறிமுகப்படுத்தியது. 2016–2017–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், 2,500 மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இழுவை இயந்திரங்கள் ரூ.225 இலட்சம் செலவில் கீழ்க்காணும் சரகங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது:-

| வ. எண் | சரகம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 715 |
| 2 | திருப்பூர் | 220 |
| 3 | சேலம் | 380 |
| 4 | காஞ்சிபுரம் | 445 |
| 5 | கும்பகோணம் | 365 |
| 6 | திருவண்ணாமலை | 350 |
| 7 | திருச்செங்கோடு | 20 |
| 8 | மதுரை | 5 |
| மொத்தம் | | 2,500 |



மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இழுவை இயந்திரம் பொருத்தப்பட்ட கைத்தறியில் நெசவு நெய்யும் நெசவாளர்

இது தவிர, 2016–2017–ஆம் ஆண்டில் மேலும் இரண்டு புதுமையான திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக கீழ்க்கண்டவாறு ரூ.124.22 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூட்டுறவு நூற்பாலைகளில் சூரிய சக்தி தகடுகளை நிறுவுதல் | **86.72** |
| 2 | ஜரிகையின் தரத்தை சோதனை செய்ய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணத்தில் எக்ஸ்.ஆர்.எப். பகுப்பாய்வு இயந்திரங்களை நிறுவுதல் | **37.50** |
| மொத்தம் | | **124.22** |

## 5 துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள்

### 5.1 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்

மத்திய அரசு நடைமுறையில் இருந்த இரண்டு திட்டங்களான ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் மற்றும் ஜவுளித்தொழில் மைய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை இணைத்து ஜவுளித்தொழிலில் பன்னாட்டு தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும் வகையில் "ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டம்" என்ற திட்டத்தினை 2005-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது.

இத்திட்டம், பன்னாட்டு தரத்துடன் கூடிய புதிய ஜவுளிப் பூங்காக்கள், வளர்ச்சியடையக் கூடிய மையங்களில் அமைக்க உதவும். இத்திட்டமானது பொது–தனியார் பங்களிப்புடன் திட்டத் தொகையில் 40 விழுக்காடு அல்லது ரூ.40 கோடிக்கு மிகாமல் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டத் தொகையில் 9 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.9 கோடிக்கு மிகாமல் மாநில அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஜவுளிப்பூங்காவின் தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு உரிமங்கள் பெறுவதற்கும், 50 விழுக்காடு பத்திர கட்டண

சலுகையுடன் நிலத்தினை பதிவு செய்தல் போன்ற சலுகைகள் பெறுவதற்கும் இத்துறை உதவி செய்து வருகிறது.



**ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர்**



**மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா – உட்புறத் தோற்றம்**

ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் **8** ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பல்வேறு திட்டங்களில் ஒப்புதலளிக்கப்பட்ட ஜவுளிப் பூங்காக்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) | | | |
| ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் **(Apparel Park for Export Scheme)** | | | | | | |
| **1** | நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா, திருப்பூர் | **2002** | **17.62** | **13.76** | **50 % பத்திர பதிவு சலுகை** | **16,000** |
| **2** | ஆயத்த ஆடை பூங்கா இருங்காட்டுக் கோட்டை, காஞ்சிபுரம் | **2004** | **26.70** | **10.68** | **சிப்காட் நிலம்** | **20,000** |
| ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் **(Textile Centre Infrastructure Development Scheme)** | | | | | | |
| **3** | ஜவுளித் தொழில் மையங் களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், காஞ்சிபுரம் | **2004** | **21.81** | **19.08** | **2.73** | உட் கட்டமைப்பு |
| **4** | காற்றாலை மின் உற்பத்தி திட்டம், டெகிக், **(TEKIC)** திருப்பூர் | **2003** | **25.00** | **12.25** | காற்றாலை மின் உற்பத்தி திட்டம் | |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) | | | |
| 5 | காவேரி உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம், நாமக்கல் | 2005 | 20.83 | 15.93 | 3.98 | 3,500 |
| | **ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் (Scheme for Integrated Textile Park)** | | | | | |
| 6 | உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம், திருப்பூர் மாவட்டம் | 2006 | 55.42 | 22.17 | 4.98 | 6,000 |
| 7 | உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம், நாமக்கல் மாவட்டம் | 2006 | 34.82 | 13.93 | 3.13 | 3,000 |
| 8 | மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, மதுரை. | 2007 | 78.76 | 31.50 | 7.08 | 8,500 . |
| 9 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர் மாவட்டம் | 2007 | 116.10 | 40.00 | 9.00 | 7,000 . |
| 10 | கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர் மாவட்டம் | 2006 | 149.45 | 40.00 | 9.00 | 12,500 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) | | | |
| **11** | சைமா பதனிடும் பூங்கா, கடலூர் மாவட்டம் | **2007** | **111.60** | **40.00** | **9.00** | **15,000** |
| **12** | பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம் மாவட்டம் | **2010** | **83.83** | **33.53** | **7.54** | **10,000** |
| **13** | பல்லவாடா தொழில் நுட்ப ஜவுளிப் பூங்கா, பல்லவாடா, ஈரோடு மாவட்டம் | **2011** | **115.27** | **40.00** | **9.00** | **5,300** |
| | மொத்தம் | | **857.21** | **332.83** | **65.44** | **1,06,800** |

## 5.2 தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம்.

### 5.2.1 விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டம் (CHDS)

மத்திய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம்/விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி, குழும வளர்ச்சித் திட்டமானது தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சந்தையின் தேவைக்கேற்ப கைத்தறி துணிகளை உற்பத்தி செய்யும் அதிக அளவிலான நெசவாளர்கள் செறிந்துள்ள இடமானது கைத்தறி குழுமம் என விவரிக்கப்படும். இத்தகைய கைத்தறிகள் ஒரே மாவட்ட நிர்வாகத்தின் கீழ் அல்லது இரண்டு அருகருகே உள்ள மாவட்டங்களின் நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள இரண்டு வருவாய் கோட்டங்கள்/கிராமங்களில் அமைந்திருக்க வேண்டும்.

தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் திருத்திய வழிகாட்டுதலின்படி கைத்தறி நெசவாளர்கள் செறிந்துள்ள வட்டாரங்களில் குழுமம் அமைக்கப்படும். இந்த வட்டார நிலையில் 200 முதல் 500 வரையிலுள்ள கைத்தறிகள் கொண்டு குழுமங்கள் அமைக்க இயலும். ஒரு வட்டாரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குழுமங்கள் நெசவாளர்களின்

எண்ணிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் அமைக்கப்படும். திருத்திய வழிகாட்டுதலின்படி வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் ரூ.200 இலட்சம் அளவில் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிதியுதவியுடன் அமைக்கப்படும்:-

| **வ. எண்** | **இனம்** | **நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | தொழில்நுட்ப மேம்பாடு | 70.00 |
| 2 | பொது வசதி மையம் | 50.00 |
| 3 | திறன் மேம்பாடு | 35.00 |
| 4 | வடிவமைப்பாளரை நியமித்தல் | 15.00 |
| 5 | திட்ட மேலாண்மை செலவு | 15.00 |
| 6 | நூல் கிடங்கிற்கான திரண்ட தொகுப்பு நிதி | 5.00 |
| 7 | வடிவமைப்பு மேம்பாடு மற்றும் கணினி உதவியுடன் ஜவுளி வடிவமைப்பு | 10.00 |
| **மொத்தம்** | | **200.00** |

இத்தொகை நீங்கலாக, மாவட்ட அளவிலான சாயச்சாலை அமைப்பதற்கு ரூ.50 இலட்சம் பெற்றுக் கொள்ளலாம்.

**அ) தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 10 வட்டார நிலை கைத்தறி குழுமங்கள்**

இவ்வினத்தின் கீழ், அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், தறி தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ், ஏற்கனவே உள்ள தறிகளுக்கு மின் மோட்டாருடன் கூடிய ஜக்கார்டு இழுவை இயந்திரம் வழங்குதல், கைத்தறிகளுக்கு தேவையான பல்வேறு வகையான கருவிகளை வழங்குதல், இரகம் மேம்படுத்துதல்/ இரகம் மாற்றம், ஜவுளி வடிவமைப்பாளர் மற்றும் விற்பனை செயல் அலுவலரை நியமித்தல், கணினி உதவியுடன் ஜவுளி வடிவமைப்பு (CATD) அமைத்தல், அட்டை துளையிடும் அமைப்பு வாங்குதல், நூல் கிடங்கு அமைக்க தேவையான (Corpus fund) திரண்ட தொகுப்பு நிதி, பொதுச் சேவை மையத்துடனான பொது வசதி மையம் அமைத்தல்/சாயச்சாலை, தொழிற்கூடம் (workshed) கட்டுதல் போன்ற இனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

மத்திய அரசு தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் **2015–2016–**ஆம் ஆண்டில் இந்திய அரசின் பங்கு ரூ.**1523.19** இலட்சம் மற்றும் பயனாளிகளின் பங்கு ரூ.**55.95** இலட்சம் ஆகியவற்றுடன் மொத்த திட்டத் தொகை

ரூ.1579.14 இலட்சத்தில் 10 வட்டார நிலை கைத்தறி குழுமங்களை மாநில அரசுக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. இதில், தொழில்நுட்ப மேம்பாடு இனத்தின்கீழ் மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட முதல் தவணைத் தொகை ரூ.604.805 இலட்சங்களை பயன்படுத்தி, 2016–2017–ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டன:-

| வ. எண் | இனத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **I** | **தொழில்நுட்ப மேம்பாடு** | | |
| i) | மின்னியல் ஜக்கார்டு இயக்கும் இயந்திரம் | 286 | 42.90 |
| ii) | அச்சு மற்றும் விழுதுகள் | 1055 | 42.20 |
| iii) | பாவு உருளை மற்றும் துணி உருளை | 564 | 28.20 |
| iv) | மின் மோட்டார் பொருத்திய பாவு சுற்றும் இயந்திரம் | 79 | 27.65 |
| v) | ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கைத்தறிக்கு ஜக்கார்டு | 354 | 53.10 |
| vi) | ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள தறிக்கு டாபி | 153 | 7.650 |
| vii) | மேசைத் தறி கொள்முதல் செய்தல் | 329 | 82.25 |

| வ. எண் | இனத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| viii) | விளக்குகள் | 200 | 7.00 |
| ix) | இதர இனங்கள் ( தார் சுற்றும் இயந்திரம்) | 150 | 3.00 |
| x) | தறி கூடம் கட்டுதல் | 99 | 69.30 |
| **II** | **திறன் மேம்பாடு** | | |
| i) | நெசவு பயிற்சி | 320 | 68.48 |
| ii) | சாயமிடுதல் பயிற்சி | 120 | 7.620 |
| iii) | வடிவமைப்பு பயிற்சி | 180 | 11.430 |
| **மொத்தம்** | | **3889** | **450.78** |

## ஆ) விரிவான கைத்தறி குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமம்

**2009–2010**–ஆம் ஆண்டில், விரிவாக்கப்பட்ட கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தினை ரூ.**87.68** கோடி மொத்த திட்ட மதிப்பில் **5** ஆண்டுகளில் செயல்படுத்தும் பொருட்டு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் விருதுநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள துணை குழுமங்களான அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், சுந்தரபாண்டியம், இராஜபாளையம், பரமக்குடி, எமனேஸ்வரம், காரைக்குடி, செல்லூர், நிலையூர், சங்கரன்கோவில், வீரவநல்லூர், கடையநல்லூர், எட்டையபுரம்

மற்றும் சாயர்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் **29,050** கைத்தறி நெசவாளர்கள் **5** ஆண்டு காலத்தில் பயன்பெற்று வருகின்றனர். விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தின் கீழ் மாவட்ட வாரியாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் விவரம் பின்வருமாறு:–

| **வ.எண்** | **மாவட்டம்** | **நெசவாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | விருதுநகர் | **9,133** |
| 2 | மதுரை | **9,642** |
| 3 | இராமநாதபுரம் | **4,839** |
| 4 | திருநெல்வேலி | **3,855** |
| 5 | தூத்துக்குடி | **903** |
| 6 | சிவகங்கை | **678** |
| **மொத்தம்** | | **29,050** |

தொழில்நுட்ப மேம்பாடு இனத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு கீழ்க்கண்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | தறிகள் மற்றும் உபகரணங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பெடல் தறி | 5,250 | 18.06 |
| 2 | மின் விசையுடன் கூடிய ஊடை நூல் சுற்றும் இயந்திரம் | 5,638 | 0.74 |
| 3 | 120 ஊக்குகள் கொண்ட ஜக்கார்டு பெட்டி | 5,229 | 1.30 |
| 4 | மின்னியல் ஜக்கார்டு தூக்கு இயந்திரம் | 72 | 0.10 |
| 5 | அச்சு மற்றும் விழுதுகள் (செட்) | 7,156 | 1.34 |
| 6 | டாபி | 70 | 0.01 |
| 7 | மின்கலத்துடன் கூடிய மின்விளக்கு | 11,081 | 2.70 |
| **மொத்தம்** | | **34,496** | **24.25** |

அண்மையில் திருத்திய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வட்டார நிலை குழும அணுகுமுறையில், மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம் நிதி வழங்கும் முறையினை மாற்றியுள்ளதோடு, திருத்திய மதிப்பினையும் கீழ்க்கண்டவாறு மாற்றி ஒப்புதல் அளித்துள்ளது:-

| இனங்கள் | திருத்திய மொத்த தொகை | மத்திய அரசின் பங்கு | SPV/ மாநிலம்/ பயனாளியின் பங்கு |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| தொழில்நுட்ப மேம்பாடு | 2675.640 | 2182.186 | 493.454 |
| வடிவமைப்பு மேம்பாடு | 75.000 | 60.000 | 15.000 |
| சந்தை மேம்பாடு | 1070.000 | 856.000 | 214.000 |
| ஏற்றுமதி | 75.000 | 60.000 | 15.000 |
| விளம்பரம் மற்றும் விளம்பரப்படுத்துதல் | 155.000 | 124.000 | 31.000 |
| புதுமையான கருத்துகள் | 350.000 | 350.000 | – |
| நிர்வாக கட்டணம் | 86.250 | 86.250 | – |
| 18 வட்டார நிலை பொது வசதி மையங்கள் ஒவ்வொன்றும் ரூ.1.30 கோடியில் | 2340.000 | 2340.000 | – |
| 05 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வசதியுடன் கூடிய சாயச்சாலை (மாவட்ட அளவில்) | 250.000 | 250.000 | – |
| விற்பனை வளாகம் (02) | 800.360 | 647.770 | 152.590 |
| குழும மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமையின் கட்டணம் | 43.620 | 43.620 | – |
| மொத்தம் | 7920.870 | 6999.826 | 921.044 |

திருத்திய திட்ட மதிப்பீட்டின்படி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் திட்ட மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு 2016–2017–ஆம் ஆண்டில், 11 வட்டார நிலை கைத்தறி குழுமங்களுக்கு ரூ.45.00 இலட்சம் வீதம் ரூ.495.00 இலட்சம் பொது வசதி மையம் அமைக்கும் இனத்தின் கீழ் பின்வருமாறு ஒப்பளிப்பு செய்து விடுவிக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | வட்டாரம் |
|---|---|
| 1. | அருப்புக்கோட்டை வட்டாரம் – 1 |
| 2. | அருப்புக்கோட்டை வட்டாரம் – 2 |
| 3. | அருப்புக்கோட்டை வட்டாரம் – 3 |
| 4. | அருப்புக்கோட்டை வட்டாரம் – 4 |
| 5. | ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டாரம் |
| 6. | இராஜபாளையம் வட்டாரம் – 1 |
| 7. | இராஜபாளையம் வட்டாரம் – 2 |
| 8. | வத்திராயிருப்பு வட்டாரம் |
| 9. | சங்கரன்கோவில் வட்டாரம் |
| 10. | பரமக்குடி வட்டாரம் |
| 11. | காரைக்குடி வட்டாரம் |



விருதுநகர் பெரும் கைத்தறி குழுமம் சார்பாக அருப்புக்கோட்டையில்
நடைபெற்ற கைத்தறி நெசவாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம்



விருதுநகர் பெரும் கைத்தறி குழுமம் சார்பாக அருப்புக்கோட்டை
வட்டாரத்தில் நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சி

## இ) விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருச்சி மாபெரும் கைத்தறி குழுமம்

**2014–2015**–ஆம் ஆண்டு, விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருச்சி மாபெரும் கைத்தறி வளர்ச்சி குழுமத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. திருச்சி மாபெரும் கைத்தறி குழுமத்தின் கீழ் அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய **8** மாவட்டங்கள் அடங்கும். இத்திட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி, மாபெரும் கைத்தறி குழுமமானது குறைந்தபட்சம் **15,000** கைத்தறிகளாகவும், மேலும் **3** ஆண்டுகளுக்கான மத்திய அரசின் பங்கு அதிகபட்சமாக ரூ.**40.00** கோடியாகவும் இருக்கும்.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் லிமிடெட் இத்திட்டத்திற்கான செயலாக்க முகமையாகவும், குழும மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமையாகவும், திருச்சி மாபெரும் கைத்தறி குழுமத்தினை செயல்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, மொத்த திட்ட தொகையான ரூ.**4,950** இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, முதற்கட்டமாக ரூ.**5.618** இலட்சத்தினை முன்பணமாகவும், தொழில்நுட்ப

மேம்பாடு இனத்தின் கீழ் தீவிரமாக செயல்படுத்த 15 விழுக்காடு நிதி உதவியாக ரூ.226.03 இலட்சம் முதல் தவணையாகவும், குழும மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமைக்கு விடுவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், தறி தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ், இருக்கும் தறிகளுக்கு நியூமேட்டிக் ஜக்கார்டு அமைப்பு மற்றும் மின் மோட்டாருடன் கூடிய ஜக்கார்டு இழுவை இயந்திரம் வழங்குதல், கைத்தறிகளுக்கு தேவையான பல்வேறு வகையான கருவிகளை வழங்குதல், இரகம் மேம்படுத்துதல்/ இரகம் மாற்றம், ஜவுளி வடிவமைப்பாளர் மற்றும் விற்பனை செயல் அலுவலரை நியமித்தல், கணினி உதவியுடன் ஜவுளி வடிவமைப்புக்கான கணினி (CATD) கொள்முதல் செய்தல், அட்டை துளையிடும் அமைப்பு வாங்குதல், நூல் கிடங்கு அமைக்க தேவையான (Corpus fund) தொகுப்பு நிதி, பொது சேவை மையத்துடனான பொது வசதி மையம் அமைத்தல்/சாயச்சாலை, தொழிற்கூடம் (workshed) கட்டுவதற்கான நிதி உதவி, மதிப்பு கூட்டுதல், திறன் மேம்பாடு, ஜவுளிப் பொருட்களின் பிராண்ட் அபிவிருத்தி, பொது

உட்கட்டமைப்பு, சுற்றுலா நினைவு பரிசு கடை, புதுமையான கருத்துகளை அமல்படுத்துதல் போன்றவற்றிற்கு நிதியுதவி வழங்கப்படும்.

திருச்சி மாபெரும் கைத்தறி குழுமத்தின் கீழ் மாவட்ட வாரியாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் விபரம் பின்வருமாறு:–

| **வ.எண்** | **மாவட்டம்** | **நெசவாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| **1** | திருச்சிராப்பள்ளி | **1,438** |
| **2** | அரியலூர் | **6,969** |
| **3** | பெரம்பலூர் | **133** |
| **4** | தஞ்சாவூர் | **5,989** |
| **5** | கரூர் | **5,178** |
| **6** | திண்டுக்கல் | **6,668** |
| **7** | திருவாரூர் | **185** |
| **8** | நாகப்பட்டினம் | **180** |
| **மொத்தம்** | | **26,740** |

மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம், திருத்திய திட்ட மதிப்பீட்டினை மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி கீழ்க்கண்டவாறு மாற்றி ஒப்புதல் அளித்துள்ளது.

| திருத்திய விரிவான திட்ட அறிக்கை | | | | |
|---|---|---|---|---|
| இனங்கள் | மொத்த தொகை | இந்திய அரசின் பங்கு | பங்குதாரர்/ பயனாளிகள்/ சிறப்பு செயல் பாட்டிற்கான அமைப்பு பங்கு | செயலாக்க முகமை |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| தொழில்நுட்ப மேம்பாடு | 2253.53 | 2006.168 | 247.362 | தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் |
| திறன் மேம்பாடு, வடிவமைப்பாளர் ஏற்பாடு, தொகுப்பு நிதி, திட்ட மேலாண்மைத் தொகை, CATD போன்றவற்றுடனான 7 பொது வசதி மையங்கள் | 910.00 | 910.00 | | தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் |
| 3 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வசதியுடன் கூடிய 3 சாயச்சாலை (கரூர், திருபுவனம் மற்றும் ஜெயங்கொண்டம்) | 150.00 | 150.00 | – | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு |
| விற்பனை வளாகம் | 600.00 | 480.00 | 120.00 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம், சென்னை |
| ஏற்றுமதியினை மேம்படுத்தும் செயல்பாடுகள் | 50.00 | 40.00 | 10.00 | |
| விளம்பரபடுத்துதல் | 75.00 | 60.00 | 15.00 | |
| பிராண்ட் புரமோசன் | 75.00 | 60.00 | 15.00 | |

| திருத்திய விரிவான திட்ட அறிக்கை | | | | |
|---|---|---|---|---|
| இனங்கள் | மொத்த தொகை | இந்திய அரசின் பங்கு | பங்குதாரர்/ பயனாளிகள்/ சிறப்பு செயல் பாட்டிற்கான அமைப்பு பங்கு | செயலாக்க முகமை |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| **புதுமையான கருத்துகள்** NID/NIFT—உடன் இணைக்கும் வகையில் சுற்றுலா நினைவு பரிசு கடை **ரூ.130.00** இலட்சத்தில் அமைத்தல் கைத்தறி கணக்கெடுப்பு — **ரூ.20.00** இலட்சம் | 150.00 | 150.00 | — | கோ—ஆப்டெக்ஸ் |
| **மொத்த திட்ட தொகை** | **4263.53** | **3856.168** | **407.362** | |
| நிர்வாக கட்டணம் மற்றும் தொழில்நுட்ப கட்டணம் | 104.182 | 104.182 | — | |
| குழும மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமை அமைப்பிற்கு கட்டணம் | 39.65 | 39.65 | — | |
| தொழில் முனைவோர்களின் நிலத்திற்கான தொகை | 108.668 | — | 108.668 | |
| **மொத்தம்** | **4516.030** | **4000.00** | **516.030** | |

மேற்கண்ட ஒப்புதலின்படி, தொழில்நுட்ப மேம்பாடு இனத்திற்காக மத்திய அரசு முதல் தவணை தொகை ரூ.743.18 இலட்சம் விடுவித்துள்ளது. 2017-2018-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன:-

| வ. எண் | இனத்தின் பெயர் | பயனாளி களின் எண்ணிக்கை | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **I** | **தொழில்நுட்ப மேம்பாடு** | | |
| i) | மோட்டார் ஜக்கார்டு இயக்கும் இயந்திரம் | 486 | 72.900 |
| ii) | அச்சு மற்றும் விழுதுகள் | 5551 | 222.040 |
| iii) | ஏற்கனவே உள்ள தறிகளுக்கு டாபி | 269 | 13.450 |
| iv) | மேசைத் தறி கொள்முதல் செய்தல் | 577 | 144.250 |
| v) | விளக்குகள் | 239 | 8.365 |
| vi) | டேக் ஆப் மற்றும் லெட் ஆப் மோஷன் | 249 | 12.450 |
| vii) | பல நாடா தாங்கும் பெட்டி | 270 | 8.100 |
| viii) | ஒன்றுக்கு மேற்பட்ட புட்டா வாங்கும் இயந்திரம் பொருத்திய ஆடுமரம் | 175 | 12.250 |
| **II** | **திறன் மேம்பாடு** | | |
| i) | நெசவு பயிற்சி | 980 | 209.720 |
| ii) | சாயமிடுதல் பயிற்சி | 280 | 17.780 |
| iii) | வடிவமைப்பு பயிற்சி | 280 | 17.780 |
| **மொத்தம்** | | **9,356** | **739.085** |

இத்திட்டத்திற்கென 2017–2018–ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**திருச்சி மாபெரும் கைத்தறி குழுமம் சார்பாக கரூர் வட்டாரத்தில் நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சி**



**திருச்சி மாபெரும் கைத்தறி குழுமம் சார்பாக திண்டுக்கல்லில் நடைபெற்ற நெசவாளர் விழிப்புணர்வு கூட்டம்**

### 5.2.2 கைத்தறித் துணிகளை சந்தைப்படுத்துவதற்கான நிதியுதவி

தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக 'கைத்தறி விற்பனை நிதியுதவி' வழங்கப்படுகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தை அமைப்புகளில், விற்பனை வழிமுறைகளை மேம்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் ஒருங்கிணைக்கப்பட்ட சூழ்நிலைகளைக் கொண்டு ஒட்டுமொத்த உன்னத நிலையினை உருவாக்குவதே கைத்தறி விற்பனைக்கான நிதியுதவியின் முக்கிய குறிக்கோளாகும்.

கைத்தறி விற்பனைக்கான நிதியுதவி இனத்தின் உட்கூறுகள் பின்வருமாறு:-

1. உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல்
2. விற்பனை உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்
3. சந்தை அணுகுமுறை உருவாக்குதல்
4. கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி செய்தல்

உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல் என்ற இனத்தின் கீழ், தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சிகள், சிறப்பு கைத்தறி கண்காட்சிகள், மாவட்ட அளவிலான கண்காட்சிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகள் நடத்துவதற்கு, வழங்கப்படும் நிதியுதவி விபரம் பின்வருமாறு :–

| வ எண் | கண்காட்சியின் விபரம் | வழங்கப்படும் நிதியுதவி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சி | 20.00 |
| 2 | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 8.00 |
| 3 | மாவட்ட அளவிலான கண்காட்சி | 2.00 |

2016–2017–ஆம் ஆண்டில் மைய அரசின் நிதியுதவியுடன் ஒரு தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சியும், 6 சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும் நடத்தப்பட்டு ரூ.4.80 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேசிய கைத்தறி கண்காட்சி**

2017–2018–ஆம் ஆண்டில், மாநிலத்தில் 13 மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகளும், 12 சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.2.3 விற்பனை ஊக்குவிப்பு திட்டம்

விற்பனை ஊக்குவிப்புத் திட்டமானது, மைய அரசின் ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் ஒரு அங்கமாகும். மைய அரசின் வழிகாட்டுதலின்படி, கைத்தறி ரகங்களை சந்தைப்படுத்த ஏதுவாக விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கைத்தறி ரகங்களின் ஒட்டுமொத்த விற்பனையை அதிகரிக்கும் வகையிலும், நுகர்வோரை கவரும் வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இத்தொகை பயன்படுத்தப்படுகிறது. விற்பனை ஊக்குவிப்பு உதவியினை மாநில கைத்தறி கழகங்களும், தலைமைக் கூட்டுறவு சங்கங்களும், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் மற்றும் தேசிய அளவிலான கைத்தறி நிறுவனங்களும் பெறுவதற்கு தகுதி பெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் சராசரி விற்பனைத் தொகையில் 10 விழுக்காடு விற்பனை ஊக்குவிப்பு தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான

நிதியினை **50 : 50** என்ற விகிதத்தில் மாநில அரசும், மைய அரசும் பகிர்ந்து கொள்கின்றன.

**2016–2017**–ஆம் ஆண்டில், **867** தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமும் (கோ–ஆப்டெக்ஸ்) கோரிய விற்பனை ஊக்குவிப்புத் தொகையில் மாநில அரசின் பங்கான ரூ.**49.01** கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக **2017–2018**–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.**100.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.3 ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா (RSBY) திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அதிக அளவில் மருத்துவ பயன்கள் பெறும் வகையிலும், தங்களின் உடல்நலத்தைப் மேம்படுத்தவும், “ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா” திட்டத்தின் கீழ் நல்வாழ்வு காப்பீடு **01.10.2014** முதல் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட ஒரு நெசவாளர் குடும்பத்தில் உள்ள **5** நபர்கள் ஆண்டொன்றுக்கு ரூ.**37,500/–**

வரையில் மருத்துவ சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளலாம். இதில் உள் நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக ரூ.30,000/–மும், புற நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கு ரூ.7,500/– வரையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில், இத்திட்டத்தின் கீழ் 221 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இக்காப்பீட்டு திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கு பயோ-மெட்ரிக் மின்னணு அடையாள அட்டைகள் (Bio-metric smart card) வழங்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையினை பயன்படுத்தி மாநிலத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பணம் செலுத்தாமல், மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்திற்கான காப்பீட்டு கட்டணமாக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு ஒரு நெசவாளர் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.179/– செலுத்தப்படுகிறது. இதில், மத்திய அரசின் பங்கு காப்பீட்டுக் கட்டணமாக ரூ.107.40 (60%)–ம், மாநில அரசின் பங்கு காப்பீட்டுக் கட்டணமாக எஞ்சிய ரூ.71.60 (40%)–மும் செலுத்தப்படுகிறது. இது தவிர நெசவாளர் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம் / புதுப்பிப்பு

கட்டணமான ரூ.30/—யை நெசவாளர்களின் சார்பாக தமிழக அரசால் செலுத்தப்படுகிறது.

மாநில அரசு கோரியதன் அடிப்படையில், மத்திய அரசு இத்திட்டத்தினை 31.03.2017 வரை நீட்டித்துள்ளது. இதன்படி, இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சேர்க்கப்பட்டுள்ள 1,44,294 கைத்தறி நெசவாளர்களின் காப்பீட்டுக் காலம் 31.03.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு, 01.12.2016 முதல் 31.03.2017 வரை நீட்டிக்கப்பட்ட 4 மாத காலத்திற்கான காப்பீட்டுக் கட்டணத்தில், மாநில அரசின் பங்கு காப்பீட்டு கட்டணம் மற்றும் பயனாளிகள் சார்பாக செலுத்தப்பட வேண்டிய புதுப்பித்தல் கட்டணம் சேர்த்து மொத்தம் ரூ.48,87,238/— விடுவித்துள்ளது.

இத்திட்டத்திற்கென, 2017—2018—ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நெசவாளர்களுக்கான நல்வாழ்வு முகாம்கள்**

2016-2017-ஆம் ஆண்டில் அனைத்து சரகங்களிலும் நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் 44 நல்வாழ்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த நல்வாழ்வு முகாம்களில்

சுமார் 7,800 நெசவாளர் குடும்பங்கள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் பெற்று பயனடைந்துள்ளனர். இந்த மருத்துவ முகாம்களில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் பருமன், எலும்பு மருத்துவம், மகளிர் சுகாதாரம், குழந்தை நலன், கண் பரிசோதனை, காது, மூக்கு, தொண்டை மற்றும் பொது மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய மருந்துகள் வழங்கப்பட்டன.



**ஈரோட்டில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கண் பரிசோதனை மேற்கொள்ளும் நெசவாளர் குடும்பங்கள்**

## 5.4 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா

### 5.4.1 கைத்தறி நெசவாளர் காப்பீட்டுத் திட்டம்

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா என்ற பெயரில் கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தினை மத்திய அரசின் நிதியுடன் 2004–2005–ஆம் ஆண்டு முதல் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் இணைந்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும் இயற்கை மரணம், விபத்தினால் ஏற்படும் மரணம் மற்றும் விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் அல்லது பகுதி ஊனம் போன்றவைகளுக்கு கூடுதல் காப்பீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புசாரா நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**திட்டத்தில் சேர்ப்பதற்கான தகுதி**

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற நெசவாளர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

- நெசவாளர்களின் மொத்த வருமானத்தில் 50 விழுக்காடு கைத்தறி நெசவின் மூலம் ஈட்டப்பட்டிருக்க வேண்டும்.

- ஆண், பெண் பாகுபாடின்றி சிறுபான்மையினர், பெண் நெசவாளர்கள் உட்பட 18 முதல் 59 வயதிற்குட்பட்ட அனைத்து நெசவாளர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு, ஒரு நெசவாளருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.330/– வீதம் காப்பீட்டு கட்டணமாக பின்வருமாறு செலுத்தப்படுகிறது :-

| **பங்களிப்பு** | **காப்பீட்டு கட்டணம் (ரூபாயில்)** |
|---|---|
| மத்திய அரசு | 150/– |
| நெசவாளர்கள் சார்பாக தமிழக அரசு | 80/– |
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் | 100/– |
| **மொத்தம்** | **330/–** |

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு :-

| விவரம் | காப்பீட்டுத் தொகை (ரூபாயில்) |
|---|---|
| இயற்கை மரணம் | 60,000/– |
| விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,50,000/– |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | 1,50,000/– |
| விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | 75,000/– |

இது தவிர, கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள ஒவ்வொரு இறந்த கைத்தறி நெசவாளரின் குடும்பத்திற்கும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் ரூ.25,000/– வழங்கப்பட்டு வருகிறது.

2016–2017–ஆம் ஆண்டில், 397 இறப்பு கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு ரூ. 2.47 கோடி காப்பீடுத் தொகையாக இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் காலம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 முதல் அடுத்த ஆண்டு அக்டோபர் 1 வரை ஆகும். 2016–2017–ஆம் ஆண்டில் 2,23,740 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி சார்ந்த உபதொழில் செய்பவர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கென மாநில அரசு ரூ.1.81 கோடி விடுவித்துள்ளது.

2017–2018–ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.4.2 சிக்ஷா சஹாயக் யோஜனா கல்வி உதவித் தொகை**

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் இரண்டு குழந்தைகளுக்கு சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின் மூலம் கல்வி உதவித் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.1,200/– வீதம் (ரூ. 600/– வீதம் இரு தவணைகளில்) 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு அல்லது 12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை வழங்கப்பட்டு வருகிறது.

2016–2017–ஆம் ஆண்டில் சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின்கீழ் 40,944 மாணாக்கர்களுக்கு ரூ.2.25 கோடி கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2017–2018–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.5 நெசவாளர் முத்ரா திட்டம்**

மத்திய அரசு, ஜுன் 2016–இல், கைத்தறி நெசவாளர்களுக்கான முந்தைய நெசவாளர் கடன் அட்டை

திட்டத்தினை மாற்றி, கூடுதல் பயன்களுடன் நெசவாளர்கள் கைத்தறி தொழிலுக்கு தேவையான மூலதனத்திற்கும், உபகரணங்கள் வாங்குவதற்கும் மானியத்துடன் கடன் பெறும் வகையில் “நெசவாளர் முத்ரா திட்டத்தினை” அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு ரூ.50,000/– முதல் ரூ.5,00,000/– வரை 6 விழுக்காடு வட்டியில் வங்கியின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. பெறப்படும் கடன் தொகையில் 20 விழுக்காடு, ரூ.10,000/–க்கு மிகாமல், விளிம்புத் தொகை மானியமாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும், வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி விகிதத்திற்கும், பயனாளிகள் செலுத்தும் 6 விழுக்காடு வட்டிக்கும் உள்ள வித்தியாசத் தொகையில், 7 விழுக்காட்டிற்கு மிகாமல் வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர, வழங்கப்படும் கடன் தொகைக்கு, மத்திய அரசால் சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கான கடன் பொறுப்பு உறுதிக் குழு நிதியில் இருந்து (CGTMSE), கடன் பொறுப்புறுதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2016–2017–ஆம் ஆண்டில் 15,000 கைத்தறி நெசவாளர்களுக்கு தேர்வு செய்யப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்க திட்டமிடப்பட்டது. தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள் மற்றும் தொடர் நடவடிக்கையின் பலனாக நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு 2016-2017-ஆம்

ஆண்டில் **18,340** முத்ரா கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் **2016–2017**–ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள முத்ரா கடன்களின் எண்ணிக்கை | : 18,340 |
| ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள முத்ரா கடன் தொகை | : ரூ.88.92 கோடி |
| விடுவிக்கப்பட்டுள்ள கடன்களின் எண்ணிக்கை | : 17,031 |
| விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை | : ரூ.82.38 கோடி |

**இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது. மத்திய அரசால் நவம்பர் 9, 2016 அன்று புது டெல்லியில் நடைபெற்ற மாநில ஜவுளித் துறை அமைச்சர்களின் வருடாந்திர மாநாட்டில், நெசவாளர் முத்ரா திட்டத்தின் செயல்பாட்டில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதாக மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களால் பாராட்டப்பட்டதுடன், தேசிய அளவில் இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த பிற மாநிலங்கள் தமிழ்நாட்டினை பின்பற்றவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.**




காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நெசவாளர் முத்ரா
கடன் வழங்கும் விழா

இத்திட்டத்தின்கீழ் 2016–2017–ஆம் ஆண்டில் சரக வாரியான முன்னேற்றம் பின்வருமாறு:–

| வ. எண் | சரகம் | வழங்கப் பட்டுள்ள முத்ரா கடன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1,186 |
| 2 | திருநெல்வேலி | 425 |
| 3 | திருவண்ணாமலை | 901 |
| 4 | திண்டுக்கல் | 1,181 |
| 5 | மதுரை | 581 |

| வ. எண் | சரகம் | வழங்கப் பட்டுள்ள முத்ரா கடன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 6 | வேலூர் | 532 |
| 7 | திருவாரூர் | 127 |
| 8 | சேலம் | 1,037 |
| 9 | பரமக்குடி | 1,018 |
| 10 | திருப்பூர் | 701 |
| 11 | விருதுநகர் | 2,610 |
| 12 | காஞ்சிபுரம் | 1,704 |
| 13 | ஈரோடு | 2,003 |
| 14 | கும்பகோணம் | 1,834 |
| 15 | கடலூர் | 413 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 265 |
| 17 | நாகர்கோவில் | 465 |
| 18 | திருச்செங்கோடு | 870 |
| 19 | கரூர் | 445 |
| 20 | திருவள்ளூர் | 42 |
| மொத்தம் | | 18,340 |




**ஐந்தாண்டுகளில் நெசவாளர் கடன் அட்டை திட்டம் / நெசவாளர் முத்ரா திட்டம் – செயல்பாடு**

## 5.6 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை பொதுக் கணக்கு மென்பொருளுடன் கணினிமயமாக்கல்

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடையும் வகையில் கைத்தறி தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டம் மத்திய மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மறுமூலதன நிதியுதவி தொகையாக ரூ.147.71 கோடி (இந்திய அரசின் பங்கு ரூ.116.31 கோடி மற்றும் தமிழக அரசின் பங்கு ரூ.31.40 கோடி) 718 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்,

கோ–ஆப்டெக்ஸ் மற்றும் 520 தனியார் நெசவாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

மறு மூலதன உதவியுடன் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள 718 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை கணினிமயமாக்கும் பொருட்டு கணினி மற்றும் உபகரணங்கள் மற்றும் பொதுக் கணக்கு மென்பொருள் வாங்குவதற்கு ரூ.430.80 இலட்சம் மத்திய அரசு வழங்கியுள்ளது. அதன்படி 718 கணினி மற்றும் உபகரணங்கள் எல்காட் நிறுவனம் மூலம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஒளிவுமறைவற்ற, சீரான மற்றும் துல்லியமான பகுப்பாய்வு தரவு தளங்களை பேணுதல், சிறந்த உட்கட்டமைப்பினை உருவாக்குதல், உற்பத்தியினை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுக்காக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தமிழ்நாடு மின்-ஆளுகை முகமையுடன் (Tamilnadu e-Governance Agency) ஒருங்கிணைந்து, “பொதுக் கணக்கு மென்பொருள்” ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த “பொதுக்கணக்கு மென்பொருள்” நெசவாளர் கூட்டுறவு

சங்கத்தின் கணக்குகளின் தொடக்கம் முதல் முடிவு வரை அனைத்து தீர்வுகளும் உள்ளடக்கிய முழுமையான தொகுப்பு வடிவத்துடன் கூடிய ஒரே மென்பொருளாக விளங்குகிறது.

இந்த “பொதுக் கணக்கு மென்பொருள்” உருவாக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, இதில் முன்னோட்ட அடிப்படையிலான செயல்பாடு ஐந்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

## 5.7 ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத்திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **11.08.2014** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களை சார்ந்த சிறு, குறு மற்றும் நடுத்தர ஜவுளி சாய, சலவை மற்றும் அதன் உபதொழில் நிறுவனங்களை புனரமைக்க ஒரு திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டமானது அப்பகுதியிலுள்ள ஆறுகள், நீர் நிலைகள் மற்றும் விவசாய நிலங்களில் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்பட்ட கழிவு நீரால் இயற்கை வளங்கள் மாசுபட்ட காரணத்தால் ஏற்பட்ட அல்லது ஏற்படும் அபாயத்தை நீக்க ஜவுளித் தொழிலின் நீண்டகால தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு, கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திட்ட முகமை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரிய திட்ட தயாரிப்பு நிதியில் இருந்து இதுவரை ரூ.3.95 கோடியினை கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், ஈரோடு, நாமக்கல், கரூர் மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள சாய மற்றும் சலவை தொழிலில் ஈடுபட்டுள்ள 1900 ஜவுளி சாயச்சாலைகளை கீழ்கண்ட 12 குழுமங்களில் கண்டறிந்துள்ளது.

| வ.எண். | குழுமத்தின் பெயர் | சாயம் மற்றும் சலவை அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஈரோடு மாவட்டம் | | |
| 1 | காடையாம்பட்டி குழுமம் | 59 |
| 2 | பவானி குழுமம் | 82 |
| 3 | பெருந்துறை குழுமம் | 44 |
| 4 | ஈரோடு தாலுக்கா குழுமம் | 549 |
| 5 | சென்னிமலை குழுமம் | 33 |
| நாமக்கல் மாவட்டம் | | |
| 6 | குமாரபாளையம் குழுமம் – I | 158 |
| 7 | பள்ளிப்பாளையம் குழுமம் | 150 |
| 8 | குமாரபாளையம் குழுமம் – II | 132 |
| 9 | இராசிபுரம் குழுமம் | 22 |
| கரூர் மாவட்டம் | | |
| 10 | மூடப்படும் நிலையிலுள்ள தற்போதைய பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் – 8 | 238 |
| சேலம் மாவட்டம் | | |
| 11 | சேலம் குழுமம் | 283 |
| 12 | எடப்பாடி குழுமம் | 150 |
| மொத்தம் | | 1900 |

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் இந்த 1900 சாயச் சலவை சாலைகளின் கணக்கெடுக்கும் பணியினை ஒவ்வொரு அலகு வாரியாக முடித்து ஈரோடு, நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களின் கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

ஈரோடு மாவட்டம், காடையாம்பட்டி பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான ரூ.160 கோடி மதிப்பீட்டிலான விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஈரோடு மாவட்டம் பவானி டையிங் குழுமத்தின் விரிவான திட்ட அறிக்கை ரூ.92.21 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தின் குழுமங்களுக்கான கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 5.8 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர்

திருப்பூர் ஜவுளி குழுமம் நாட்டின் பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முக்கியத்துவம் வாய்ந்த மையமாக விளங்குகின்றது. இது பின்னலாடையின் தலைநகரம் என அறியப்படுவதுடன் உலகிலுள்ள அனைத்து வகையான முதன்மை ஜவுளி வணிக பிராண்டுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றது. தற்பொழுது, ரூ.36,000/– கோடி மதிப்பிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு தேவைப்படும் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் துணிகள்

இங்குள்ள **2,500** ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை நிறுவனங்களிலிருந்து பெறப்படுகிறது. மேற்படி நிறுவனங்களில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான நபர்கள் வேலை செய்கிறார்கள். இங்குள்ள **742** சாயச்சாலைகள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு, ஜவுளி மதிப்பு தொடரில் மிகவும் முக்கிய பங்காக விளங்குகிறது.

ஜவுளி சாயத் தொழில் வளர்ச்சியின் காரணமாக நொய்யல் ஆறு மாசு அடைந்து, விவசாயத்திலும் கடுமையாக பாதித்துள்ளது. இயற்பியல் மற்றும் வேதியியல் அடிப்படையில் பழமையான முறையில் அமைக்கப்பட்ட சில பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் இந்த பிரச்சனைக்கு திறம்பட தீர்வு காண இயலவில்லை. எனவே, ஜவுளி நிறுவனங்கள் எதிர் சவ்வூடு முறையில் **18** பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை ரூ.**500.36** கோடி அளவுக்கு வங்கியில் கடன் பெற்று அமைக்க திட்டமிட்டன.



வீரபாண்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நுண் வடிகட்டுதல் – எதிர்மறை சவ்வூடு பரவல்



வீரபாண்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஆவியாக்கும் இயந்திர கலன்



வீரபாண்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின்
இரு வடிகட்டி



சிறுபூலுவாபட்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின்
ஆவியாக்கும் இயந்திர கலன்

பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றம் முறையினை ஜவுளித் தொழிலில் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டபோது, அனுபவமின்மை மற்றும் போதிய நிபுணத்துவமின்மை காரணமாக பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ய நிலை கழிவு நீரை வெளியேற்ற இயலவில்லை. அதன் காரணமாக, ஜனவரி 2011–இல் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் அனைத்து பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் மூடும்படி ஆணையிட்டது. இந்த ஆணையின் காரணமாக சாய சலவைச் சாலைகள் ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு காலம் மூடப்பட்டது.

திருப்பூர் சாயச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிதிச் சுமையைக் குறைக்கவும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்கவும் அரசின் உதவியினைக் கோரியது. அக்கோரிக்கையின் அடிப்படையில், மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ. 300 கோடியினை மானியமாக 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியது. அதில் மத்திய அரசின் பங்கு ரூ.187.50 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.112.50 கோடி ஆகும். ஒப்பளிப்பு செய்யப்பட்ட மான்யத்தொகை 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

வங்கியில் பெற்ற கடன் அசல் நிலுவைத்தொகையினை நேர் செய்ய வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டது.

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றும் பணியினை மேற்கொள்வதற்கு, கூடுதல் கருவிகளை கொள்முதல் செய்து நிறுவ மாநில அரசு ரூ.200 கோடியினை வட்டியில்லா கடனாக ஒப்பளிப்பு செய்தது. பொது சுத்திகரிப்பு நிலையங்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி ரூ.271.053 கோடியிலான திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றத்திற்கான தொழில் நுட்பத்தோடு, கூடுதல் இயந்திரங்களை நிறுவியும் / மேம்படுத்தியும் பயனடைந்தன.

ஆயினும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, அரசு வட்டியில்லா கடன் தொகையை ஒரே சீராக மாற்றி பூஜ்யநிலை கழிவு நீர் வெளியேற்றும் திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு அளவிற்கு 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்குவதற்கு ரூ.179.340 கோடியிருந்து ரூ.203.290 கோடியாக உயர்த்தி வழங்கியது. இதுவரை, ரூ.132.340 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.122.122 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பளிப்பு செய்யப்பட்ட மானியம் மற்றும் வட்டியில்லா கடன் தொகை விபரம் பின்வருமாறு:–

| வ. எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | சுத்திகரிப்பு நிலையத்தின் அலகுகள் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | வெளியேற்றப் படும் கழிவுநீர் அளவு (MLD) | மைய, மாநில அரசுகள் வழங்கிய மானியம் (ரூபாய் கோடியில்) | | | மாநில அரசு ஒப்பளிப்பு செய்துள்ள வட்டியில்லா கடன் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மைய அரசின் மானியத் தொகை | மாநில அரசின் மானியத் தொகை | மொத்த மானியத் தொகை | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | வீரபாண்டி | 72 | 74.86 | 12.00 | 20.04 | 12.02 | 32.06 | 23.144 |
| 2 | அங்கேரி பாளையம் | 77 | 60.72 | 10.00 | 15.42 | 9.25 | 24.67 | 18.105 |
| 3 | பார்க் | 3 | 26.69 | 2.00 | 6.97 | 4.18 | 11.15 | 4.745 |
| 4 | மண்ணரை | 28 | 28.74 | 4.20 | 8.28 | 4.97 | 13.25 | 8.325 |
| 5 | எஸ். பெரியபாளையம் | 7 | 14.15 | 1.50 | 3.94 | 2.36 | 6.30 | 7.515 |
| 6 | சிறுபூலுவாப்பட்டி | 24 | 53.01 | 5.00 | 13.05 | 7.83 | 20.88 | 11.936 |
| 7 | காரைப்புதூர் | 25 | 33.00 | 4.50 | 7.64 | 4.59 | 12.23 | 12.837 |
| 8 | ஆண்டிப் பாளையம் | 20 | 23.00 | 4.50 | 5.03 | 3.02 | 8.05 | 6.353 |
| 9 | வேட்டுவபாளையம் | 9 | 6.90 | 1.50 | 1.47 | 0.88 | 2.35 | 3.309 |
| | நொய்யல் (SPV) | | 203.85 | 0 | 50.89 | 30.54 | 81.43 | 0 |
| 10 | அ) அருள்புரம் | 15 | | 5.50 | | | | 11.325 |
| 11 | ஆ) கள்ளிக்காடு | 12 | | 3.00 | | | | 4.874 |
| 12 | இ) முருகம் பாளையம் | 67 | | 11.00 | | | | 22.650 |
| 13 | ஈ) ராயபுரம் | 25 | | 5.50 | | | | 11.325 |
| | மங்களம் ஈஸ்டர்ன் (SPV) | | 90.31 | 0 | 22.43 | 13.46 | 35.89 | 0 |
| 14 | அ) மங்களம் | 17 | | 4.00 | | | | 8.903 |
| 15 | ஆ) ஈஸ்டர்ன் | 27 | | 5.80 | | | | 11.090 |
| | திருப்பூர் தொழிலியல் (SPV) | | 127.71 | 0 | 32.34 | 19.40 | 51.74 | 0 |
| 16 | அ) சின்னக்கரை | 29 | | 8.00 | | | | 16.470 |
| 17 | ஆ) காசிப்பாளையம் | 14 | | 4.40 | | | | 9.060 |
| 18 | இ) குண்ணங்கல் பாளையம் | 19 | | 5.50 | | | | 11.325 |
| | மொத்தம் | 490 | 742.94 | 97.90 | 187.50 | 112.50 | 300.00 | 203.290 |

நீண்ட காலம் மூடியிருந்த காரணத்தால், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் வங்கியில் பெற்ற கடன் நிலுவைத் தொகையினை (அசல் மற்றும் வட்டித்தொகை) செலுத்த

இயலாத நிலை ஏற்பட்டதால், திருப்பூர் சாயச்சாலை உரிமையாளர்கள் சங்கம் மீண்டும் அரசின் உதவியினை கோரி ரூ.200/– கோடி சிறப்பு நிதியுதவியாக வங்கிகளின் கடன் நிலுவைத்தொகையினை நேர் செய்ய மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்திற்கு கோரிக்கை அனுப்ப கோரியது. மத்திய அரசு ரூ. 200/– கோடியை ஒப்பளிப்பு செய்து வட்டியில்லா கடனாக 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விடுவித்தது. இத்தொகை முதலில் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனின் அடிப்படையில் மானியமாக மாற்றப்படும் எனவும் மத்திய அரசின் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்தொகையில் வங்கி கடன் தொகைக்கான ஒரே தவணை செலுத்தும் திட்டத்தின்படி கடனை நேர் செய்ய ரூ.147.49 கோடியும் மற்றும் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்பாட்டிற்கு பயன்படுத்த வழங்கப்பட்ட தொகை ரூ.52.51 கோடியும் அடங்கும்.

அரசு 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கடன் நிலுவையை முழுவதுமாக ஒரே தவணையில் செலுத்தும் திட்டத்தின்படி நேர் செய்யும் பொருட்டு 11 தேசிய வங்கிகளுக்கு ரூ.147.49 கோடியை விடுவித்துள்ளது. எஞ்சிய சிறப்பு நிதித்தொகை ரூ. 52.51 கோடியினை பொது சுத்திகரிப்பு நிலையங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பூஜ்ய நிலை

கழிவு நீர் எட்டும் பணியின் திட்டத்தொகையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பிரித்து வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

## மைய அரசால் வழங்கப்பட்ட சிறப்பு நிதி உதவி

(ரூ. கோடியில் )

| வ. எண். | பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | விரிவான திட்ட அறிக்கையின் படி பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்ற திட்டத் தொகை | வங்கி களுக்கு வழங்கப்பட்ட ஒரே தவணைத் தொகை | மத்திய அரசால் வழங்கப்பட்ட ரூ.52.51 கோடி பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்ற திட்டத் தொகையின் படி பிரித்து வழங்கப்பட்ட விபரம் | மத்திய அரசால் வழங்கப் பட்ட மொத்த வட்டி யில்லா கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | அருள்புரம் | 15.100 | 5.950 | 2.925 | 8.875 |
| 2 | சின்னக்கரை | 21.960 | 7.700 | 4.254 | 11.954 |
| 3 | இராயபுரம் | 15.100 | 5.950 | 2.925 | 8.875 |
| 4 | வீரபாண்டி | 30.859 | 8.490 | 5.978 | 14.468 |
| 5 | காசிப் பாளையம் | 12.080 | 4.240 | 2.340 | 6.580 |
| 6 | குண்ணங்கல் பாளையம் | 15.100 | 5.300 | 2.925 | 8.225 |
| 7 | முருகம் பாளையம் | 30.200 | 11.910 | 5.851 | 17.761 |
| 8 | ஈஸ்டர்ன் | 14.786 | 7.590 | 2.864 | 10.454 |
| 9 | சிறுபுலுவாப் பட்டி | 15.915 | 20.540 | 3.083 | 23.623 |
| 10 | காரைப்புதூர் | 17.116 | 22.460 | 3.316 | 25.776 |
| 11 | மங்கலம் | 11.870 | 5.060 | 2.300 | 7.360 |
| 12 | அங்கேரிப் பாளையம் | 24.140 | 10.550 | 4.677 | 15.227 |

(ரூ. கோடியில் )

| வ. எண். | பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | விரிவான திட்ட அறிக்கையின் படி பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்ற திட்டத் தொகை | வங்கி களுக்கு வழங்கப்பட்ட ஒரே தவணைத் தொகை | மத்திய அரசால் வழங்கப்பட்ட ரூ.52.51 கோடி பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்ற திட்டத் தொகையின் படி பிரித்து வழங்கப்பட்ட விபரம் | மத்திய அரசால் வழங்கப் பட்ட மொத்த வட்டி யில்லா கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| **13** | கள்ளிக்காடு | **6.498** | **3.250** | **1.259** | **4.509** |
| **14** | ஆண்டிப் பாளையம் | **8.470** | **14.230** | **1.641** | **15.871** |
| **15** | மண்ணரை | **11.100** | **3.990** | **2.150** | **6.140** |
| **16** | பார்க் | **6.327** | **3.940** | **1.226** | **5.166** |
| **17** | வேட்டுவ பாளையம் | **4.412** | **1.470** | **0.855** | **2.325** |
| **18** | எஸ். பெரிய பாளையம் | **10.020** | **4.870** | **1.941** | **6.811** |
| **மொத்தம்** | | **271.053** | **147.490** | **52.510** | **200.000** |

பூஜ்ய நிலை கழிவு நீர் எய்தும் பணியினை நிறைவேற்றுவதற்காக கூடுதல் இயந்திரங்களை பொருத்தும் பணி அருள்புரம், பார்க் ஆகிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நிறைவு பெற்று விட்டது. இதர பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மேம்படுத்தும் பணி விரைவில் நிறைவு பெறும். இத்திட்டத்திற்காக, இதுவரை ரூ.25.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

## 6 துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்கள்

### 6.1 நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், **08.05.2013** அன்று சட்டமன்றப் பேரவை விதி **110**–இன் கீழ், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கென **10,000** பசுமை வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் கட்டுவதற்கு தலா ரூ.**2.60** இலட்சம் (கட்டுமானத்திற்கு ரூ.**2.30** இலட்சம் மற்றும் சூரிய மின்சக்திக்கு ரூ.**0.30** இலட்சம்) வீதம் **10,000** பசுமை வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு ரூ.**260** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நெசவாளர்கள் தங்கள் இல்லங்களிலேயே கைத்தறிகளை நிறுவி தொழில் செய்யும் வகையில் நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் ஒவ்வொன்றும் **365** சதுர அடி பரப்பளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் ஒருங்கிணைந்து கட்டப்பட்டுள்ளது. இவ்வீடுகளில் சூரிய மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



திருப்பூரில் கட்டப்பட்ட நெசவாளர் பசுமை வீடுகள்

## 6.2 மாநில அளவில் சிறந்த நெசவாளர்களுக்கான விருது

அரசு **2013-2014**-ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக, அதிக உற்பத்தி மற்றும் விற்பனையில் குறிப்பிடத்தக்க வகையில்

பங்களிப்பினை நல்கிய சிறந்த நெசவாளரை ஊக்குவிக்கும் வண்ணம் மாநில அளவிலான சிறந்த நெசவாளருக்கான விருதுடன், ரூ.1,00,000/– ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தினை 2013–2014–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. அதனடிப்படையில் மாநில அளவில் சிறந்த நெசவாளர் விருது மற்றும் ரொக்கப் பரிசு ரூ.1,00,000/- தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

2017–2018-ஆம் ஆண்டிலும் இத்திட்டமானது தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு செலவு திட்டத்தில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.3 கூட்டுறவு நூற்பாலை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் கடந்த 2013-2014–ஆம் ஆண்டு முதல்

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ், பத்தாம் வகுப்பில் முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கர்களுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000 மற்றும் ரூ.2,000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதே போல் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கர்களுக்கு முறையே ரூ.10,000, ரூ.7,500 மற்றும் ரூ.5,000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## 6.4 மாவட்டங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளில் பங்கேற்றல்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையால், மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளில், கைத்தறி இரகங்களின் விற்பனையை மேம்படுத்துவதற்காக கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பாக அரங்கங்கள் அமைக்கப்படுகின்றன. கைத்தறி துணி வகைகளை சந்தைப்படுத்துதல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதலே இப்பொருட்காட்சியில் பங்குகொள்வதன் அடிப்படை நோக்கமாகும். 2016–2017–ஆம் ஆண்டில் மதுரை, நாகர்கோவில், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய 6 மாவட்டங்களில்

நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்பாக பங்கேற்றதற்காக தலா ரூ. **66,000/–** வீதம் மொத்தம் ரூ**3.96** இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.




**நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற**
**அரசு கைத்தறி கண்காட்சி**

இந்த நடவடிக்கை **2017–2018**–ஆம் ஆண்டிலும் தொடரும். இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**2.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.5 சிறிய அளவிலான ஜவுளி பூங்கா

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **01.09.2015** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110–**இன் கீழ் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்கள் ஒருங்கிணைந்த சிறிய அளவிலான ஜவுளி பூங்கா அமைப்பதற்கான நிதியுதவி அங்கீரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு திட்ட மதிப்பில் **50** விழுக்காட்டுத் தொகை ரூ.**2.50** கோடி உச்சவரம்பிற்குட்பட்டு நிதியுதவியாக வழங்கப்படுகிறது. தமிழக அரசின் முடிவு, மாவட்ட ஆட்சியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர்கள் தொழில் முனைவோர்களுடன் கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள்.

## 6.6 மாநில ஜவுளி ஆலோசனைக் குழு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **01.09.2015** அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி **110**-இன் கீழ் தமிழகத்தில் ஜவுளித் தொழிலானது நிலைத்து நிற்கவும், வலுப்பெறவும், ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான கைத்தறி, விசைத்தறி, நூற்பு பிரிவு, ஆயத்த ஆடை

மற்றும் பின்னலாடை பிரிவுகளை வலுப்படுத்தி வளர்ச்சி அடையும் விதமாக மாநில ஜவுளி ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான கைத்தறி, விசைத்தறி, நூற்பு, ஆயத்த ஆடை, சாயமிடுதல், நெசவு, பின்னலாடை மற்றும் உற்பத்தி பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, மாநில ஜவுளி ஆலோசனைக் குழு அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இக்குழுவின் முக்கிய குறிக்கோளானது மாநிலத்தின் ஜவுளித் தொழில் முன்னேற்றம் குறித்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதாகும்.

இக்குழு, ஜவுளித் தொழிலின் வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கும் குழுவாகும். இக்குழு, 3 மாதத்திற்கு ஒரு முறை அல்லது தேவைக்கேற்ப கூடி, மாநிலத்தின் ஜவுளித் தொழிலில் ஏற்படும் இடர்பாடுகளை களைந்து அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்து விவாதித்து, உரிய ஆலோசனைகளை வழங்கும். இதன் முதல் கூட்டமானது 29.02.2016 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜவுளித் தொழில் எதிர்கொள்ளும் பல்வேறு இடர்ப்பாடுகள் குறித்து உறுப்பினர்களிடம் விவாதிக்கப்பட்டு, அதனை களைவதற்கான ஆலோசனைகள்

கோரப்பட்டன. இதன் இரண்டாவது கூட்டம் 15.06.2017 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இக்குழுவின் உறுப்பினர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 6.7 லூம்வேர்ல்டு

மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை செயல்பாடுகளுக்கு உதவிபுரியும் வகையில் "**லூம்வேர்ல்டு**" என்ற வணிகப் பெயரில் சிறப்பு வகை விற்பனை நிலையங்கள் தமிழகத்தில் 2000–ஆம் ஆண்டு துவக்கப்பட்டன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி துணி இரகங்களை, கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நிர்வாகத்தின் கீழ் ஒரே வணிக பெயரில் விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில், சென்னையில் அண்ணாநகர் மற்றும் எழும்பூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய 8 இடங்களில் "லூம்வேர்ல்டு" நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

சங்கங்களின் உற்பத்தி பொருள்களை கணிசமான அளவில் விற்பனை செய்வதற்கு இவ்விற்பனை நிலையங்கள் உதவியாக உள்ளன. லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்களின் 2016–2017-ஆம் ஆண்டுக்கான விற்பனை மதிப்பு ரூ.11.96 கோடியாகும்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் துணி வகைகளின் விற்பனையினை மேம்படுத்தவும், வாடிக்கையாளர்கள் கைத்தறி துணிகளை இணையதளம் மூலம் கொள்முதல் செய்யவும் ஏதுவாக, லூம்வேர்ல்டு என்ற வணிக பெயரில் www.loomworld.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு 30.12.2015 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.




**லூம்வேர்ல்டு இணையதளம்**

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகமானது “லூம்வேர்ல்டு” என்ற வணிக பெயரிலான மின்வர்த்தக செயல்பாட்டிற்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

**2016–2017**ஆம் ஆண்டில், **ரூ.6.17 இலட்சம்** மதிப்பிலான **480 கைத்தறி இரகங்கள்** இணைய தள மின்வணிகம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இணைய தள மின்வணிகத்தினை மேம்படுத்தும் விதமாக, Gocoop Solutions and Services Private Limited மற்றும் Peagarse Technologies Limited, பெங்களூரு (www.chasingsun.com) ஆகிய இரண்டு தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 6.8 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு

அரசு, புத்துயிரூட்டல், சீர்திருத்தம் மற்றும் சீரமைப்புத்திட்டத்தை விரிவுபடுத்தியும், நபார்டு வங்கியின் மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து கொடுத்தும், வட்டிச் சுமையினை குறைப்பதற்காக வட்டி மானியம் வழங்கியும்

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி வசதி செய்துள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா பெடல்தறி மற்றும் விலையில்லா தார் சுற்றும் இயந்திரம் மற்றும் நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய தேவைகளுக்கான புதுமையான உபகரணங்கள் ஆகிய பல்வேறு உபகரணங்கள் வழங்குதல், தள்ளுபடி மானியம் வழங்குதல், விற்பனை ஊக்குவிப்பு செய்தல் மற்றும் தமிழ்நாட்டிலும், வெளி மாநிலங்களிலும் கண்காட்சிகள் நடத்துவதற்கு நிதி உதவி செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டது.

அரசினால் மேற்கொள்ளப்பட்ட இந்த பயனுள்ள நடவடிக்கைகளின் மூலம் **2016–2017–**ஆம் ஆண்டில் இலாபத்தில் இயங்கி வந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை **964** ஆக உள்ளது.

### 6.9 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் , 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும், விசைத்தறிகள் ஆதிக்கத்தில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு, மத்திய அரசானது கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் **1985–**னை இயற்றி கீழ்க்காணும் **11** இரகங்களை பிரத்யேகமாக கைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்துள்ளது:-

| வ. எண் | இரகம் | வ. எண் | இரகம் |
|---|---|---|---|
| 1 | சேலை | 7 | டிரஸ் மெட்டீரியல் |
| 2 | வேட்டி | 8 | பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளி |
| 3 | துண்டு / கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | 9 | ஷால், லாய், மப்ளர், பங்கி முதலியன |
| 4 | லுங்கி | 10 | உல்லன் ட்வீடு |
| 5 | ஜடார் மேகலா/ பாநெக் | 11 | கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உள்பட) |
| 6 | ஜமக்காளம் / டர்ரி (அ) டர்ரட் | | |


இச்சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரம், மாநில கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கும், அடுத்த நிலையில் உதவி இயக்குநர் பதவி நிலைக்கு குறையாமல் உள்ள அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, இச்சட்டத்தை செயல்படுத்த சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் (அமலாக்கம்) தலைமையில் தனியே ஒரு அமலாக்கப் பிரிவும், சரக அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி இயக்குநர்கள் பதவி

நிலையில், உதவி அமலாக்க அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு விசைத்தறிகள் செறிந்துள்ள பகுதிகளில் விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 2016–2017–ஆம் ஆண்டில் 91 விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இச்சட்டத்தை செயல்படுத்த தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதோடு, சட்ட விதிமுறைகளை மீறியவர்கள் மீது முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

2016–2017-ஆம் ஆண்டிற்கான விசைத்தறிகள் ஆய்வு இலக்காக 65,196 விசைத்தறிகள் நிர்ணயிக்கப்பட்டதில், 66,933 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தியதன் விளைவாக, 55 முதல் தகவல் அறிக்கைகள் (FIR) பதிவு செய்யப் பட்டுள்ளன. இதில் 22 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.




**கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985 இன் கீழ் விசைத்தறிகள் ஆய்வு**

## 6.10 கைத்தறி உற்பத்தி இரகங்களை புவிசார் குறியீடு சட்டம் 1999-இன் கீழ் பதிவு செய்தல்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சிறப்பு வாய்ந்த பொருட்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பினை வழங்குகிறது. இத்தகைய புவிசார் குறியீட்டுப் பொருட்களை தவறாக பயன்படுத்துவதில் இருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். புவிசார் குறியீட்டுப் பதிவு, இத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை

மேம்படுத்துவதுடன், உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் ஓர் அங்கமான அறிவுசார் சொத்துரிமை வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பிற நாடுகளிலும் பாதுகாப்பைப் பெற இயலும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், சேலம் வெண்பட்டு, ஆரணி பட்டுச் சேலைகள் மற்றும் கோவை கோரா காட்டன் இரகங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்யும் 21 கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 10 தனியார் உற்பத்தியாளர்கள், 60 கோரா காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யும் சங்கங்கள், 30 பவானி ஜமக்காளம் உற்பத்தி செய்யும் சங்கங்கள் மற்றும் 8 சேலம் வெண்பட்டு உற்பத்தி செய்யும் சங்கங்கள் ஆகியவை புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 6.11 கைத்தறி முத்திரைத் திட்டம்



**கைத்தறி முத்திரையுடன் கூடிய**
**பரமக்குடி பருத்தி சேலை**

கைத்தறி முத்திரைத் திட்டம் இந்திய அரசால் **28.06.2006** அன்று அறிமுகப்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு விசைத்தறி அல்லது ஆலைகளில் உற்பத்தி செய்யப்படாத உண்மையான கைத்தறி உற்பத்தி என்பதற்கான உத்தரவாதம் அளிக்கிறது. இத்திட்டம் கைத்தறி உற்பத்திக்கு தனித்தன்மை கிடைக்கப்பெறச்செய்வதுடன்,

உள்நாடு மற்றும் பன்னாட்டு சந்தைகளிலும் கைத்தறி இரகங்களின் விற்பனை அதிகரிக்கிறது.

இத்திட்டம், கைத்தறி பொருட்களுக்கு தனித்தன்மை கிடைப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு உண்மையான கைத்தறி பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்து சந்தை தொடர்பினை பலப்படுத்தவும் உதவுகிறது. இத்திட்டம் மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தனி நபர்கள், தனியார் நெசவாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்து கைத்தறி முத்திரையினை உபயோகித்து வருகின்றனர். 2016–2017–ஆம் ஆண்டில், 8,592 நிறுவனங்கள்/ தனியார்கள் பதிவு செய்துகொண்டு, 3.53 கோடி கைத்தறி முத்திரை வில்லைகளை கொள்முதல் செய்துள்ளனர்.

## 6.12 பட்டு முத்திரை



**பட்டு மற்றும் கைத்தறி முத்திரையுடன்**
**காஞ்சி பட்டு சேலை**

உள்ளூர் சந்தையிலும், பன்னாட்டு சந்தையிலும், பட்டு ரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு, மத்திய அரசு **17.04.2004** முதல் பட்டு முத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. சுத்தமான இயற்கை பட்டு வகைகளான மல்பெரி, டஸ்ஸர், எரி அல்லது முகா பட்டினை கொண்டு தரத்தினை உறுதி செய்து உற்பத்தி

செய்யப்படும் பட்டு ரகங்களில் இப்பட்டு முத்திரை ஒட்டப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்கள் மட்டுமே இப்பட்டு முத்திரை வில்லைகளை உபயோகிக்கலாம். இந்த பட்டு முத்திரை திட்டம், மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியத்தின் நிதி பங்களிப்புடன் கர்நாடக சங்கங்களின் பதிவு சட்டம் 1960–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்திய சில்க் மார்க் நிறுவனம் (SMOI) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் தனியார் நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், மாநில மற்றும் தனியார் நிறுவனங்கள் உறுப்பினர்களாக சேரலாம். இந்த நிறுவனத்தில் பதிவு செய்துகொண்ட நிறுவனங்கள் மட்டுமே அவர்களது பட்டு உற்பத்தியில் பட்டு முத்திரை வில்லைகளை உபயோகிக்கலாம்.

இதுவரை, 81 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இந்திய சில்க் மார்க் நிறுவனத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக உள்ளன.

## 6.13 இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்

INDIA HANDLOOM

COMFORT | STYLE | FASHION

கைத்தறி தொழிலை மேம்படுத்தவும், பேணிக்காக்கவும் தேசிய கைத்தறி தினமான 07.08.2015 அன்று "இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்" இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் சமூக சுற்றுச்சூழலுக்கு இணக்கமாக மூலப்பொருட்கள், பதனிடுதல், நிர்வாகம், நெசவு, வடிவமைப்பு மற்றும் இதர அம்சங்கள் அனைத்திலும் கைத்தறி இரகங்களின் தரத்தினை உறுதிசெய்து வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெற இயலும்.

சுற்றுச்சூழல் பாதிப்பற்ற நேர்த்திமிகு கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்வதன் மூலம் வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையை பெற்று புதிய வடிவமைப்புகளில் தரமான

ரகங்களின் உற்பத்தியை உறுதி செய்வதே இவ்வணிகச்சின்னத்தை நிறுவியதன் முக்கிய நோக்கமாகும்.

தரமான கைத்தறி நெசவு இரகங்களை விரும்பும் வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு குறைபாடற்ற நம்பகத்தன்மை மிக்க உயர்தர கைத்தறி இரகங்களுக்கு மட்டுமே ''இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்'' வழங்கப்படுகிறது. கைத்தறி இரகங்களுக்கென பிரத்தியேக சந்தையை உருவாக்குவதோடு, நெசவாளர்களின் வருவாயை அதிகரிப்பது, சமூக சுற்றுச்சூழல் உணர்வுள்ள வாடிக்கையாளரின் எதிர்பார்ப்பு மற்றும் தரமான கைத்தறி பொருட்களை வழங்குவது இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் நோக்கங்கள் ஆகும்.

**இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் பயன்கள்**

- கைத்தறி இரகங்களில் உயர்தரமான முன்னோடி இரகங்களை இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் மூலம் வகைப்படுத்துவதால் தர அளவீடுகளில் இதர இரகங்களிலிருந்து வேறுபடுத்தி காட்டுதல்
- வணிகச் சின்னம் மூலம் வாடிக்கையாளர் தாம் வாங்கும் கைத்தறி இரகத்தின் உயர் தரத்தை உறுதிசெய்து கொள்வதோடு, நல்ல தரமான நூல் மற்றும் புற்றுநோயை

உண்டாக்கும் சாயங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட வேதிப்பொருட்களற்ற பாதுகாப்பான சாயப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதும் உறுதி செய்து கொள்ள முடிகிறது.

- மொத்த கொள்முதலாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தரமான வகைப்பாட்டுடன் கூடிய இரகங்களை அவர்கள் தேவைக்கேற்ற வடிவமைப்புகளில் கொள்முதல் செய்ய இயலும்.

- மொத்தமாக கொள்முதல் ஆணை பெறுவதன் மூலமாக நெசவாளர்களுக்கான வருவாய் அதிகரிப்பதோடு சந்தையில் நேரடியாக ஈடுபட வழிவகுக்கிறது.

- நெசவாளர் தொழில்முனைவோர் மற்றும் இதர உற்பத்தியாளர்கள் தரமான கைத்தறி இரகங்களை மொத்தமாக உற்பத்தி செய்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விற்பனை மேற்கொள்ள வழிவகை செய்கிறது.

- கைத்தறி தொழிலின் மகளிர் உள்ளிட்ட நலிவுற்ற பிரிவினர் மதிப்பு கூட்டப்பட்ட தரமான இரகங்களை உற்பத்தி செய்வதன் மூலம் அதிக வருவாய் ஈட்டுவதால் சமூகத்தில் மதிப்புமிக்கவர்களாக முடிகிறது.
- www.indiahandloombrand.gov.in, www.handlooms.nic.in மற்றும் www.textilescommittee.gov.in ஆகிய இணைய தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ள பதிவு பெற்ற பயனாளிகளின் பட்டியலை பார்வையிடுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் ரகங்களின் தரத்தை எளிதாக உறுதி செய்து கொள்ள முடிகிறது.

**செயலாக்கம்**

"இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்" எனும் புதுமுயற்சி கைத்தறி வளர்ச்சி ஆணையரால், இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஜவுளி குழு துணையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் கைத்தறி இரகங்களை பதிவு செய்துகொள்ள இதற்கென கைத்தறி வளர்ச்சி ஆணையரால் துவக்கப்பட்ட சிறப்பு பிரிவு மற்றும் நாடெங்குமுள்ள 28 நெசவாளர் சேவை மையங்களில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பெறலாம்.

காஞ்சிபுரத்திலுள்ள நெசவாளர் சேவை மையம் தமிழகத்தில் உள்ள கைத்தறி இரகங்களை இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பங்களை பெறுகிறது. பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீதான முதற்கட்ட ஆய்வுக்கு பிறகு தகுதியான விண்ணப்பங்கள் மற்றும் இரகங்கள் ஜவுளிக் குழு, மும்பை ஆய்வகத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்படுகிறது.

ஆய்வுக்கு பின்னர், "இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின்" அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்யும் இரகங்களின் மாதிரிகளுக்கு இந்திய அரசின் ஜவுளிக் குழு பதிவெண்ணுடன் கூடிய சான்றிதழ்களை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குகிறது. சான்றிதழின் பதிவு எண்ணை அக்குறிப்பிட்ட இரகத்தின் லேபிலாக விண்ணப்பதாரர் பயன்படுத்தலாம். மைய அரசின் ஆய்வகத்தில் பரிசோதிக்கப்படும் சோதனை மாதிரிகள் அனைத்தும் கடுமையான தரக்கட்டுபாட்டுகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பதிவு எண் வழங்கப்படுகிறது.

**31.03.2017** முடிய இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் **17** பிரிவுகளில் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யும் **80** முகமைகள் / தொழிலகங்கள் பதிவு செய்துள்ளன.

இந்த இணையதளத்தில், சேலம் பட்டு வேட்டிகள், செட்டிநாடு பருத்தி சேலைகள், காஞ்சிபுரம் பட்டு சேலைகள், ஆரணி பட்டு சேலைகள், பட்டு அங்கவஸ்திரம், பருத்தி கைலி ஆடைகள், இயற்கை சாயமிட்ட துணிகள், தரை விரிப்பு, திரை சீலைகள், கோரா பருத்தி சேலைகள், திண்டுக்கல் பருத்தி சேலைகள் போன்ற இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்துள்ளன.

## 7 துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 7.1 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

கூட்டுறவு அமைப்பில் உறுப்பினரல்லாத நெசவாளர்களுக்கு கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடை இரகங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் **1964–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இக்கழகம், அரசு மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியில் பெற்ற காசுக்கடன் ஆகியவை மூலம் பின்வருமாறு நிதி திரட்டியுள்ளது :-

(ரூபாய் இலட்சத்தில்)

<table>
<tr><th colspan="3">பங்கு மூலதனம்</th><th colspan="2">வங்கி காசுக்கடன்</th></tr>
<tr><td>(அ)</td><td>அரசின் பங்கு</td><td>267.00</td><td rowspan="3">பாரத ஸ்டேட் வங்கி</td><td rowspan="3">330.00</td></tr>
<tr><td>(ஆ)</td><td>உறுப்பினர்கள்</td><td>162.24</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>429.24</td></tr>
</table>

**2016–2017–**ஆம் ஆண்டில், இக்கழகம் **27** உறுப்பினர்களுக்கு ரூ.**11.38** இலட்சம் அளவிற்கு கடன் வழங்கியுள்ளது. **2016–2017–**ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.**12.75** இலட்சம் (உத்தேசமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தை பின்வரும் திட்டங்களுக்கு முகமை நிறுவனமாக / செயல்படுத்தும் முகமையாக அரசு நியமித்துள்ளது :-

| வ.எண். | திட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | கைத்தறி நெசவாளர்களுக்கான ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா என்ற மருத்துவ காப்பீட்டுத் திட்டம் |
| 2. | திருச்சி கைத்தறி பெருங் குழுமத்திட்டம் |
| 3. | விருதுநகர் பெருங் குழுமத்திட்டம் |
| 4. | ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டம் |
| 5. | லூம்வேர்ல்டு இணையதள விற்பனை செயல்பாடு |
| 6. | விற்பனை ஊக்குவிப்பு திட்டம் |
| 7. | 8 லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் |

### 7.1.1 2017–2018–ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்

- இக்கழகம் கடன்தாரர்களிடமிருந்து அசல் ரூ.75 இலட்சமும், வட்டி ரூ.100 இலட்சமும் வசூலிக்க திட்டமிட்டுள்ளது.

- இக்கழகம் "லூம்வேர்ல்டு" என்ற வணிக பெயரிலான மின்வர்த்தகம் (e-shopping) மூலமாக ரூ.25.00 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணி வகைகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.
- ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டம், ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டம் ஆகிய

திட்டங்களுக்கு செயல்படுத்தும் முகமை நிறுவனமாகவும், விருதுநகர் மற்றும் திருச்சி மாபெரும் கைத்தறி குழுமங்களை செயல்படுத்தும் குழும மேலாண்மை மற்றும் தொழில் நுட்ப முகமை நிறுவனமாகவும் இக்கழகம் தொடர்ந்து செயல்படும்.

- இக்கழகம் ஆகாஷ் நிறுவனம் மூலமாக ரெயில்வே துறைக்கு ரூ.10.00 கோடி மதிப்பிலான கைத்தறி துணிகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

- மாநிலத்தில் உள்ள லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள் மூலம் ரூ.25.00 கோடி அளவிற்கு கைத்தறி துணிகளை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 7.2 கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 1958 முதல் 1985 வரையிலான காலக்கட்டத்தில் 4.70 இலட்சம் நூற்புக் கதிர்களுடன் நிறுவப்பட்டது. இந்த கூட்டுறவு நூற்பாலைகள் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நூல் தேவையினை நியாயமான விலையில் தடையின்றி வழங்கவும்,

சிட்டா நூல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தொடர்ந்து வழங்கும் நோக்கத்துடனும் துவக்கப்பட்டன.

பொருளாதார மந்த நிலை, சந்தை நிலவரம், பஞ்சு விலையேற்றம், பழைய இயந்திரங்கள், உற்பத்தி குறைவு மற்றும் மூலதன பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களினால் 13 கூட்டுறவு நூற்பாலைகள் முற்றிலுமாக செயலிழந்தன. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தவிர இதர 12 கூட்டுறவு நூற்பாலைகளும் கலைக்கப்பட்டு விட்டன. எனினும், தற்பொழுது (i) அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, (ii) பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், (iii) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, (iv) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி, மற்றும் (v) கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை ஆகிய ஆலைகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

### 7.2.1 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துதல்

தமிழக அரசால், புதுதில்லி தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் நிதி உதவியுடனும், மாநில அரசின் பங்கு மூலதனத்துடனும், இயங்கும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை புனரமைப்பதற்காகவும், முழுமையாக

நவீனப்படுத்துதலுக்காகவும், ரூ. **147.21** கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில், ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளிலும் நவீனப்படுத்தும் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்தது. அதே போன்று, இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையும் ரூ.**28.02** கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த ஆறு கூட்டுறவு நூற்பாலைகளும் **1,18,368** நவீனப்படுத்தப்பட்ட கதிர்களுடன் இயங்கி, உயர்தரமான நூலினை உற்பத்தி செய்கின்றன. நவீனமயமாக்கலுக்கு பின்னர், நூற்பாலைகளின் உற்பத்தி திறன் **5,975** மெட்ரிக் டன்னிலிருந்து **10,606** மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. மேலும், இந்த கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் அரசு திட்டங்களான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான தரமான நூல் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.



இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின்
தானியங்கி கழிவுப் பஞ்சை வெளியேற்றும் இயந்திரம்



புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின்
டிராயிங் பிரிவு

| வ. எண். | விவரம் | நவீன மயமாக்கலுக்கு முன்னர் | நவீனமயமாக்கலுக்கு பின்னர் (31.03.2017 வரை) |
|---|---|---|---|
| 1 | கதிர்களின் எண்ணிக்கை | 1,13,000 | 1,18,368 |
| 2 | ஆண்டொன்றுக்கு சராசரி நூல் உற்பத்தி (மெட்ரிக் டன்) | சிட்டா : 1,188<br>கோன் : 4,787<br>மொத்தம் : 5,975 | சிட்டா : 4,542<br>கோன் : 10,598<br>மொத்தம் : 15,140 |
| 3 | உற்பத்தி மதிப்பு (ரூ.கோடியில்) | 90.68 | 324.91 |
| 4 | இயந்திரப் பயன்பாடு | 75% முதல் 85% | 75.88% முதல் 87.61% |
| 5 | சராசரி ஊசி முனை உற்பத்தி (கிராமில்) | 75 | 110.95 |
| 6 | நூலின் வலுத்தன்மை | 2,000 | 2,300 முதல் 2,400 |

**நவீனமயமாக்கலுக்கு முன்னரும், பின்னரும் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 20.09.2016-ஆம் தேதிய அறிவிப்பிற்கிணங்க, ஆறு இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு கூடுதல் இயந்திரங்களான “டூ பார் ஒன் ட்விஸ்டர்” (Two for one twister) “டபுளிங் இயந்திரம்” (doubling machine), “கோம்பர் இயந்திரம்” (Comber Machine) மற்றும் “ஒபன் என்ட் இயந்திரம்” (open end machine) போன்ற நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின்

நிதியுதவியுடன் ரூ.19.295 கோடி பின்வருமாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | கூட்டுறவு நூற்பாலையின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள திட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அண்ணா | 579.39 |
| 2 | பாரதி | 482.11 |
| 3 | கன்னியாகுமரி | 86.00 |
| 4 | புதுக்கோட்டை | 417.00 |
| 5 | கிருஷ்ணகிரி | 100.00 |
| 6 | இராமநாதபுரம் | 265.00 |
| மொத்தம் | | 1929.50 |

### 7.2.2 2016–2017–ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

- கூட்டுறவு நூற்பாலைகளில், நூல் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, தொழிலாளர்களின் பங்கேற்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, **2015–2016**–ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஆலையிலும் சிறப்பாக பணியாற்றியதாக தேர்வு செய்யப்பட்ட தொழிலாளிகளுக்கு ரொக்கப்பரிசாக தலா ரூ.**25,000/–** மற்றும் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பத்தாம் வகுப்பில்

முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 வீதம் கல்வி உதவித் தொகை 2016–2017-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. இதே போல் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் மூன்று நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 வீதம் கல்வி உதவித் தொகை 2016–2017-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

- விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2017–ன் கீழ் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.95.35 கோடி மதிப்புள்ள 4,233.02 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.

- விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 2016–2017–ஆம் ஆண்டில் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.81.33 கோடி மதிப்புள்ள 3,959.92 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.

- விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 2017–2018-ஆம் ஆண்டில் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.87.28 கோடி மதிப்புள்ள 3,764 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.

- நவீனமயமாக்கலுக்குப் பின், அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும் தரமான நூல் தயாரிப்பினை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன.

- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழக்கமாக தேவைப்படும் 20s, 26s, 2/17nf போன்ற சிட்டா நூல் இரகங்களையும் கூட்டுறவு நூற்பாலைகளே முழுமையாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன.

- இனிவரும் காலங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் நெசவாளர்களுக்குத் தேவையான சிட்டா நூல் வகைகளை முழுமையாக உற்பத்தி செய்து வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- நவீனப்படுத்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளின் இரகம் வாரியான நூல் உற்பத்தித் திறன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | நூல் எண் | மொத்த உற்பத்தி திறன் ஆண்டு ஒன்றுக்கு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| **1** | **20s சிட்டா** | **100** |
| **2** | **26s சிட்டா** | **50** |
| **3** | **40s சிட்டா** | **600** |
| **4** | **60s சிட்டா** | **4** |
| **5** | **2/17s சிட்டா** | **1,500** |
| **6** | **2/30s சிட்டா** | **300** |
| **7** | **2/40s சிட்டா** | **300** |
| **8** | **2/60s சிட்டா** | **4** |
| **9** | **40s கோன்** | **8,000** |
| **10** | **60s கோன்** | **700** |
| **11** | **2/30s கோன்** | **1,000** |
| **12** | **2/40s கோன்** | **500** |
| மொத்தம் | | **13,058** |



அண்ணா கூட்டுறவு நூற்பாலையின்
புதிய பிரேக்கர் டிராயிங் இயந்திரம்



பாரதி கூட்டுறவு நூற்பாலையில் உள்ள
தானியங்கி கோன் வைண்டிங் பிரிவு

## 7.3 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் முற்றிலும் அரசு நிறுவனமாக **1969** ஆம் ஆண்டு, நிறுவனங்களின் சட்டம் **1956**-இன் கீழ் துவங்கப்பட்டது.

தமிழ்நாடு பஞ்சாலை கழகத்திற்கு சொந்தமாக தலா **36** தறிகளுடன், மூன்று விசைத்தறிகூடங்கள் அருப்புக்கோட்டை (விருதுநகர் மாவட்டம்), சிவகிரி (ஈரோடு மாவட்டம்) மற்றும் குறிச்சி (கோயம்புத்தூர்) ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் மேம்பட்ட தரம் கொண்ட துணிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தி திறனை அதிகரிக்கவும், இந்நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும், இந்நிறுவனம் **10** நவீன ஏர்ஜெட் தறிகளை கோயம்புத்தூர் குறிச்சியில் நிறுவி, **2015**–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உற்பத்தியை தொடங்கியுள்ளது.

இந்நிறுவனம், மேற்படி விசைத்தறி கூடங்கள் மற்றும் ஏர்ஜெட் தறிகூடம் ஆகியவற்றில் பாலியஸ்டர் காட்டன் சூட்டிங் மற்றும் சர்ட்டிங் துணி வகைகளை உற்பத்தி செய்து பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றது. மேலும் இந்நிறுவனம் பள்ளிகளுக்கு, விலையில்லா சீருடை வழங்கும்

திட்டத்தின் கீழ், சர்ட்டிங், கேஸ்மெண்ட் மற்றும் டிரில் ஆகிய துணிகளையும், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் வேட்டிகளையும்  உற்பத்தி செய்து வழங்கி வருகின்றது.



**குறிச்சி அலகின் தானியங்கி விசைத்தறி கூடம்**

மேற்படி துணி வகைகளை உற்பத்தி செய்வது போக, தமிழ்நாடு பஞ்சாலை கழகம், பள்ளி சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி சேலை

வழங்கும் திட்டத்திற்கு கொள்முதல் முகமை நிறுவனமாகவும் இக்கழகம் செயல்பட்டு வருகிறது.


**2016–2017**-ஆம் ஆண்டில், இந்நிறுவனம் மாநில போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு காவல் துறை, டெக்ஸ்கோ, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS), நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் மற்றும் பிற பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து **11.18** இலட்சம் மீட்டர் பாலியஸ்டர் காட்டன் கலவை சீருடைத் துணிகள் ரூ. **12.33** கோடி மதிப்பில் விநியோகம் செய்ய ஆணைகள் பெற்று விநியோகம் செய்துள்ளது.

இந்நிறுவனத்தின் **2016–2017**-ஆம் ஆண்டிற்கான நிதி செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு –

| ஆண்டு | மொத்த உற்பத்தி (இலட்சம் மீட்டர் களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த விற்பனை (இலட்சம் மீட்டர்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | நிகர இலாப/ நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 2016–2017 | 41.27 | 1787.59 | 42.22 | 2386.68 | (+) 196.45 |

**7.3.1 2017–2018–ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

இக்கழகம், அரசின் நலத் திட்டங்களுக்காக 25.90 இலட்சம் மீட்டர் சீருடைத்துணிகளையும், இதுதவிர அரசுத் துறை நிறுவனங்களுக்கு தேவையான சுமார் ரூ.12.33 கோடி மதிப்புள்ள துணிகளையும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.





**தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் செயல்பாடு**

## 7.4 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் **1974**-ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டம் **1956**-இன் கீழ் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் ISO 9001 : 2008 தரச் சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான சரிகையினை தயாரித்து நியாயமான விலையில் வழங்கி வருகிறது. இந்நிறுவனம் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள ‘‘எக்ஸ் ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்‘‘ (X-Ray Fluorescence analyzer) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் (Non Destructive Method) அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

இந்நிறுவனம் சரிகை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருளான வெள்ளிப்பட்டிழையினை கொள்முதல் செய்து

சரிகை உற்பத்தி செய்து வருகிறது. தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தில் அரசு பங்கு முதலீடு ரூ.34.40 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் முந்தைய வருடங்களில் ஈட்டிய இலாபத்திலிருந்து அரசுக்கு ஈவுத்தொகையாக (Dividend) ரூ.123.14 இலட்சம் செலுத்தியுள்ளது.



**தமிழ்நாடு சரிகை ஆலையில் தங்க இழை தட்டையாக்குதல்**

2016–2017–ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 31,045 மார்க்குகள் சரிகை உற்பத்தியினை மேற்கொண்டு ரூ.34.19 கோடி மதிப்புள்ள 31,977 மார்க்குகள் விற்பனை செய்துள்ளது.

### 7.4.1 2017–2018 -ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

1) தமிழ்நாடு சரிகை ஆலை, 2017–2018–ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 3,000 மார்க் சரிகையினை உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

2) தங்க முலாம் பூசும் பிரிவில் புதிய தொழில் நுட்பம் மற்றும் இரசாயனங்கள் பயன்படுத்தி சரிகையின் தரத்தினை மேம்படுத்த (நிறம் மற்றும் பளபளப்பு) திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.5 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை பல்வேறு பதனிடும் பணிகளான வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொருட்டு 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இவ்வாலை ISO:9001–2008 சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும் மேலும் இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 21 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது. சீருடைத் திட்டத்திற்காக பள்ளி குழந்தைகளுக்கான துணிகளை பதனிடுவதோடு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

சங்கங்கள், காதி சர்வோதயா சங்கம், கோவை மத்திய சிறைச்சாலை, கைத்தறி வளர்ச்சிக் கழகம், கேரளா, தமிழ்நாடு துணிநூல் கழகம், கோயம்புத்தூர் மற்றும் தனியார் ஏற்றுமதியாளர் வழங்கும் துணிகளைப் பதனிட்டு வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாலை கழிவு மேலாண்மையுடன் கூடிய எதிர் சவ்வூடு பரவல் முறையினை பயன்படுத்தி சாயக்கழிவு நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி மூலம் மீண்டும் பதனிடுவதற்கு பயன்படுத்துவதன் மூலம் பூஜ்யக் கழிவு நீர் வெளியேற்றும் நிலையினை அடைந்துள்ளது.

இவ்வாலை **2016–2017**ஆம் ஆண்டில், **116.95** இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட்டு ரூ.**20.83** கோடி அளவிற்கு வணிகம் மேற்கொண்டுள்ளது.

### 7.5.1 2017–2018–ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

இந்த ஆலை ஏற்கனவே ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின்கீழ் நவீனப்படுத்துதல் செயல்திட்டத்தினை ரூ.**7.04** கோடி மதிப்பில் செயல்படுத்தியுள்ளது. எனவே, இந்த ஆலை முந்தைய செயல் திறனான நாளொன்றுக்கு **50,000** மீட்டர் பதனிடும் திறனில் இருந்து நாளொன்றுக்கு **70,000** மீட்டர் பதனிடும் திறன் கொண்டதாக உள்ளது.


இந்த ஆலை தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் மூலம் விவசாய கூட்டுறவுக்கான மத்திய ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் (CSISAC) ரூ.220.00 இலட்சம் மதிப்பில் பதனிடும் இயந்திரங்களை பகுதி நவீனப்படுத்தவும், அலுவலக மற்றும் தொழிற்சாலை கட்டிடங்களை புதுப்பிக்கவும் உத்தேசித்துள்ளது.

## 7.6 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை முறைப்படுத்தும் பொருட்டு, 1994–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை, நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள், இணையங்கள், இந்திய பஞ்சு கழகம் மூலம் கொள்முதல் செய்து விநியோகிப்பதாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக,

ரூ.25.00 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும், வழங்கியுள்ளது.

டான்ஸ்பின் நிறுவனம் இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பஞ்சு கொள்முதல் செய்வதற்காக ரூ.7.55 கோடி கடனுதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் இவ்விணையம் சேவைக் கட்டணமாக ரூ.133.00 இலட்சம் பெற்று 2016–2017–ஆம் ஆண்டில் ரூ.69.00 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது.




**கடந்த ஐந்தாண்டுகளில் ஈட்டிய இலாபம்**

## 7.7 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை

கோ–ஆப்டெக்ஸ் அகில இந்திய அளவில் கைத்தறியில் முதன்மை பெற்ற நிறுவனம். பல வண்ணங்களுடன் கூடிய பட்டாம்பூச்சியை தனது முத்திரையாக கொண்ட கோ-ஆப்டெக்ஸ், கைத்தறியின் தரத்தையும் மற்றும் வெளிப்படையான வியாபாரத்தையும் தனது வாடிக்கையாளர்களுக்கு நாடு முழுவதும் வழங்குகிறது. தமிழ் நாட்டின் ஆயிரம் ஆண்டுகள் பழமையான நெசவு பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் திறன் வாய்ந்த நெசவாளர்களைக் கொண்டு கலை நயத்துடன் கூடிய கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்வதோடு, சமுதாய நலனை கருத்தில் கொண்டு மாநிலத்தின் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புகளை இன்றளவும் வழங்கி வருகிறது.

கோ–ஆப்டெக்ஸ் **1935**–ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, தனது **194** விற்பனை நிலையங்கள் வாயிலாக நாடு முழுவதுமுள்ள தனது வாடிக்கையாளர்களை சென்றடைகிறது.

அகில இந்திய அளவில் மற்ற முதன்மை கைத்தறி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், கைத்தறியில் அதிக உற்பத்தி செய்து, கைத்தறிக்கு மிகச் சிறந்த பங்களிப்பினை கோ–ஆப்டெக்ஸ் ஆற்றி வருகிறது.

அரசு திட்டங்களை கையாள்வதில் மிகச் சிறந்த அனுபவத்துடன் தன்னை ஈடுபடுத்தி உள்ளதால், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கும், பள்ளி மாணவ மாணவியருக்கு, இலவச சீருடைகள் வழங்கும் திட்டத்திற்கும் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. முதியோர்களுக்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு பிரத்யேகமான முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் செயல்படுகிறது.


விருதுநகர் கைத்தறி பெருங் குழுமத்திற்கு திட்ட செயலாக்க நிறுவனமாக மத்திய மாநில அரசுகளால் கோ–ஆப்டெக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.


1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சந்தை ஆதரவிற்கான உறுதுணையாக இருந்து, கைத்தறி இரகங்களை பிரபலபடுத்துதல்.
2. பல்வேறு வகையிலான புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துதல்.
3. கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

**7.7.1 சில்லரை விற்பனை 2016-2017**

கோ–ஆப்டெக்ஸ் 2016–2017 ஆம் ஆண்டில், ரூ.315.05 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. விழாக்கால கொள்முதல் என இருந்த நடைமுறையை மாற்றி ஆண்டு முழுவதும் தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், கலைநயத்துடன் அதிக எண்ணிக்கையிலான விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியமையாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை அறிமுகப்படுத்தியதாலும், புதிய பணியாளர்களை நியமனம் செய்தல் மற்றும் ஊழியர்களை ஊக்குவித்தல் மூலமாகவும் இந்த விற்பனையை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.




**கடந்த 4 ஆண்டுகளில் சில்லரை விற்பனை**




**2016-2017-இல் இரகவாரியான விற்பனை**

### 7.7.2 2016–2017–ஆம் ஆண்டில் புதிய உத்திகள்

#### 7.7.2.1 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தப்படுதல்

2016–2017–ஆம் ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் கீழ்க்கண்ட 5 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியுள்ளது:–

1. திருப்பூர்
2. தேனி
3. நாமக்கல்
4. பூனே
5. மைசூரு

இது தவிர, ஈரோடு மாவட்டம், சென்னிமலை பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் வீட்டு உபயோகத்திற்கான துணி இரகங்களை பிரத்யேகமாக விற்பனை செய்வதற்கு என கோ–ஆப்டெக்ஸ், சென்னை தியாகராய நகரில் ‘‘ஹோம்–டெக்ஸ்’’ என்ற விற்பனை நிலையத்தை திறந்துள்ளது.



திருப்பூர் விற்பனை நிலையம்



தேனி விற்பனை நிலையம்



**கோ–ஆப்டெக்ஸ் @ தி.நகர்**



**ஹோம்–டெக்ஸ் @ தி.நகர்**

### 7.7.3 மின்வணிகத்தில் வியாபார ஒப்பந்தம்

உலகளவில் வாடிக்கையாளர்களை சென்றடையும் வகையில், கோ–ஆப்டெக்ஸ் ஏற்கனவே தொடங்கியுள்ள தனது மின்வணிக தளத்தில் தனது வியாபார எல்லைகளை விரிவாக்கம் செய்யும் நோக்கில் கிராப்ட்ஸ் வில்லா என்ற மின்வணிக நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மின்வணிக செயல்பாடுகளை அதிகரிக்கும் வகையிலான இந்த கூடுதலான மின்வணிக ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2016–2017–ஆம் ஆண்டில், கோ–ஆப்டெக்ஸ் தனது மின்வணிகம் மூலம் ரூ.53.53 இலட்சம் விற்பனை மேற்கொண்டுள்ளது.



### 7.7.4 வடிவமைப்பில் புதுமைகள்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமானது, வாடிக்கையாளர்களின் மாறிவரும் ரசனை மற்றும் தேவைகளை அறிந்து அதற்கு ஏற்ப தனது வடிவமைப்பு நிலையத்தில் எண்ணற்ற புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி வருகிறது. **2016–2017–**ஆம் ஆண்டில் **2,040** புதிய வடிவமைப்புகளை பல்வேறு இரகங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.



**காஞ்சிபுரம் பட்டு சேலை**



மதுரை சுங்குடி பருத்தி சேலை



காஞ்சிபுரம் பட்டு சேலை



திண்டுக்கல் பருத்தி சேலை



திருபுவனம் பட்டு சேலை

### 7.7.5 கண்காட்சிகள்

கோ–ஆப்டெக்ஸ் தனது விற்பனை நிலையங்கள் இல்லாத நகரங்களிலும் வாடிக்கையாளர்களை அணுகும் வகையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், தமிழ்நாட்டிலும், 90 கைத்தறி கண்காட்சிகளை நடத்தியுள்ளது. இத்தகைய கண்காட்சிகள் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பினை பெற்றுள்ளதுடன் கோ–ஆப்டெக்ஸ் துணி வகைகளும் ரூ.9 கோடி அளவிற்கு விற்பனைசெய்யப்பட்டுள்ளன.

### 7.7.6 நெசவாளர் அடையாள அட்டை

கைத்தறி நெசவு என்பது ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லப்படும் கைவினை செயல்பாடாக உள்ளதால், இதற்கு பொறுமையும் தனித்திறனும் தேவைப்படுகின்றது. ஒரு நெசவாளி ஒரு சேலையை நெய்வதற்கு, குறைந்த பட்சம் 15,000 முறை தனது கைகளையும், கால்களையும், அசைக்க வேண்டி உள்ளது. எனவே, கோ-ஆப்டெக்ஸ் அனைத்து கைத்தறி பொருட்களிலும் அதை நெய்த நெசவாளர்கள் குறித்து தெரியப்படுத்தும்விதமாக நெசவாளர் அடையாள அட்டையை இணைத்து வழங்குகிறது. இந்த நெசவாளர் அடையாள அட்டையானது வாடிக்கையாளர் மற்றும் நெசவாளர் இடையே தொடர்பு ஏற்படுத்துகிறது.




**நெசவாளர் அடையாள அட்டை**

### 7.7.7 கைத்தறி நெசவு விழிப்புணர்வுச் சுற்றுலா

கோ–ஆப்டெக்ஸ், காஞ்சிபுரம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய கைத்தறி குழுமங்களுக்கு தனது வாடிக்கையாளர்களை கைத்தறி சுற்றுலா அழைத்து சென்றுள்ளது. இதன் மூலம் இளைய தலைமுறையினருக்கு நமது பாரம்பரிய கைத்தறி நெசவுப்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், நமது நெசவாளர்களின் திறன் பற்றியும்

அறிந்து கொள்ளவும் வழிவகை செய்துள்ளது. இச்சுற்றுலாவில் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு, நமது நெசவாளர்களின் கடின உழைப்பு பற்றி அறிந்து, மிகவும் பெருமைப்பட்டதோடு, தங்களது வாழ்நாள் முழுவதும் கைத்தறி துணிகளுக்கும் கோ–ஆப்டெக்ஸ்-க்கும் ஆதரவாக இருப்போம் என உறுதி கூறினர்.



## 7.7.8 புதிய இரகங்கள் அறிமுகப்படுத்துதல்

நகரங்களில் உள்ள வாடிக்கையாளர்களின் இரசனையை மனதில் கொண்டு கோ–ஆப்டெக்ஸ் புதிய இரகங்களை 2016–2017–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

### க்வில்ட் (Quilts)

கோ–ஆப்டெக்ஸ், உயர்தர கைத்தறி மெல்லிய மெத்தையினை அனைத்து பெரிய விற்பனை நிலையங்களிலும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர்களிடையே அமோக வரவேற்பினை பெற்றுள்ளது.



### ஸ்டோல் (Stoles)

கோ–ஆப்டெக்ஸ், மணமேடு மற்றும் திண்டுக்கல் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களை கொண்டு சாதா மற்றம் "டை அன்டு டை" வடிவமைப்புகளுடன் கூடிய

“பருத்தி ஸ்டோல்’’ (Stoles) இரகங்களின் உற்பத்தியினை துவக்கியுள்ளது.



**7.7.9 விற்பனை ஊக்குவிப்பு திட்டங்கள்**

**7.7.9.1 இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, 2011–2012–ஆம் ஆண்டில் "இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" என்ற புதுமையான திட்டம் துவக்கப்பட்டது. வாடிக்கையாளர்களின் பேராதரவினால் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் மூலமாக ரூ.33.08 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

பல்வேறு வணிக நிறுவனங்கள் ஆடி மாதத்தில் வழங்கும் சிறப்புத் தள்ளுபடி சலுகைகளுடன் போட்டியிடும் வகையில் முதல் முறையாக கடந்த ஆண்டு தமிழ் மாதமாகிய ஆடி மாதத்தில் **18.07.2016** முதல் **16.08.2016** வரை, “ஆடியில் அதிர்ஷ்டம்” என்ற திட்டத்தை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி ரூ.15 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

### 7.7.9.2 கனவு நனவு திட்டம்

‘‘கனவு நனவு திட்டம்’’என்னும் பிரபலமான மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை கோ–ஆப்டெக்ஸ் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள், குறைந்தபட்சம் ரூ.100/– மற்றும் ரூ.100 இன் மடங்குகளில் மாதத்தவணையாக செலுத்தப்படுகிறது. வாடிக்கையாளர்கள் 9 தவணைகள் செலுத்திய பிறகு, 10 ஆவது தவணை தொகை கோ–ஆப்டெக்ஸால் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் தாங்கள் செலுத்தும் 9 மாத மொத்த தவணை தொகையின் மீது 58 விழுக்காடு கூடுதல் பணப் பலனைப் பெறுகிறார்கள். மேலும், கோ–ஆப்டெக்ஸ் 6 முதல் 8 தவணைகளில் பண்டிகை காலத்தை இணைக்கும் வகையிலான கனவு நனவு திட்டத்தினையும் வழங்குகிறது.

34,000 வாடிக்கையாளர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இதன் மூலம் ரூ. 21 கோடி மதிப்பிற்கு 2017–2018–ஆம் ஆண்டில் விற்பனை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 7.7.9.3 தங்கமழைத் திட்டம்

தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் ரொக்க விற்பனையை அதிகரிக்கும் நோக்கில், **“தங்க மழைத் திட்டம்”** என்னும் திட்டத்தினை, வாடிக்கையாளர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் ரூ.2,000/– மதிப்பிற்கும் மற்றும் அதன் மடங்குகளிலும், ரொக்கத்திற்கும், வங்கி அட்டைகளின் மூலமும் ஜவுளிகளை வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் இந்த போட்டியில் கலந்து கொள்ள இயலும். ஒவ்வொரு ரூ.2,000/–ம் அதன் மடங்குகளிலான ரொக்க விற்பனைக்கு, வாடிக்கையாளர்களுக்கு போட்டி கூப்பன்/கூப்பன்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1.10 கிலோ தங்ககாசுகள் 220 வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 7.7.10 கணினி மயமாக்கல்

கோ–ஆப்டெக்ஸ் “இன்போடெக்ஸ்” (Infotex) என்ற திட்டத்தினை உலக வங்கியின் நிதி உதவியுடன், மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை மூலம் தொடங்கியுள்ளது. இன்போடெக்ஸின் பயன்பாடு மூலம் கோ–ஆப்டெக்ஸின் பல்வேறு செயல்பாடுகள் / பிரிவுகள் அனைத்து நிலைகளிலும் ஒருங்கிணைக்கப்படுவதால், நெசவாளர் சங்கங்கள் / நெசவாளர்கள் / வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு சிறந்த சேவையை வழங்க இயலும் என்பதோடு, நிகழ்நேர விவரங்கள் கிடைக்கப் பெற்று கோ–ஆப்டெக்ஸ் செயல்பாட்டுத் திறனும் மேம்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான கணினி வன்பொருள் சாதனங்கள், இணையதள இணைப்பு மற்றும் பயிற்சி ஆகியன உதவியாக உள்ளன.

### 7.7.11 சர்வதேச கண்காட்சிகள்

கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல், ஜெர்மனி நாட்டிலுள்ள ஃபிராங்க்பர்ட் நகரில் நடைபெற்ற ஜவுளி இரகங்களுக்கான கண்காட்சியிலும், புதுதில்லி, நொய்டாவில் நடைபெற்ற இந்தியன் ஹேண்டிகிராப்ட்ஸ் அண்டு கிப்ட்

கண்காட்சி 2017-லும் கலந்து கொண்டு ரூ.1.00 கோடி மதிப்பிலான விற்பனை ஆணையினை பெற்றுள்ளது.




**கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்,**
**ஹெய்ம் டெக்ஸ்டைல்ஸ் 2017 கண்காட்சி,**
**ஃபிராங்க்பர்ட், ஜெர்மனி**

### 7.7.12 அரசு திட்டங்களை செயல்படுத்துதல்

விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், விலையில்லா பள்ளி சீருடை விநியோகம் திட்டம், மைய அரசு உதவியுடன் செயல்படும் விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம் திட்டம் ஆகியவற்றிற்கு முகமை மற்றும் செயல்படுத்தும் நிறுவனமாக செயல்படுகிறது. மேலும், முதியோர் ஓய்வூதியத்

திட்டத்தின் கீழ் வேட்டி சேலைகளை விநியோகம் செய்யும் பிரத்யேக முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் செயல்படுகிறது.

### 7.7.13 2016–2017 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

**விற்பனை இலக்கு**

புதிய வடிவமைப்புகளை உருவாக்குதல், புதிய இரகங்களை அறிமுகம் செய்தல், விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல், அரசுத்துறை நிறுவனங்களின் துணித் தேவைகளை வழங்குதல், பரவலான விளம்பரங்கள் ஆகிய நடவடிக்கைகள் மூலம் **2017–2018** ஆம் ஆண்டிற்கு ரூ.**350** கோடி விற்பனை இலக்கை அடைய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

## 8. 2017–2018-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

மாநில அரசு "கைத்தறி மற்றும் துணிநூல்" துறைக்கு 2017–2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் பின்வரும் விவரப்படி ரூ.1234.6868 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2017–2018 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் | **49,045.00** |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் | **168.00** |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் | **40,520.55** |
| 4 | வட்டி மானியம் வழங்கும் திட்டம் | **1,050.00** |
| 5 | கைத்தறித் துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி மானியம் வழங்குதல் | **8,000.00** |
| 6 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | **200.00** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2017–2018 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 7 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | **1,100.00** |
| 8 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | **150.00** |
| 9 | முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் | **2,388.55** |
| 10 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | **200.00** |
| 11 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்புத் தொகை | **10,000.00** |
| 12 | கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுதல் | **145.00** |
| 13 | பூஜ்ய கழிவு நீர் நிலையை எட்டும் பணிக்காக திருப்பூரில் உள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கடன்கள் | **7,095.00** |
| 14 | செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் – கைத்தறி – துணிநூல் ஆணையர் / இயக்குநரின் பொறுப்பிலுள்ளவை | **100.00** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2017–2018 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 15 | சிறந்த கைத்தறி நெசவாளருக்கு பரிசு வழங்கும் திட்டம் | 1.00 |
| 16 | மின்னணுவால் நியூமேட்டிக் முறையில் இயக்கப்படும் ஜக்கார்டு இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் – மாநில புதுமை நிதி | 120.00 |
| 17 | கைத்தறி நெசவாளர்களுக்கு நியூமேட்டிக் கருவியுடன் கூடிய கைத்தறிகள் வழங்குதல் – மாநில புதுமை நிதி | 45.00 |
| 18 | 6 கோல்கள் கொண்ட சாயத் தொட்டிகள் நிறுவுதல் – மாநில புதுமை நிதி | 30.00 |
| 19 | பட்டு சாயச் சாலைகளுக்கு கழுவுதல் மற்றும் அலசும் இயந்திரம் கொள்முதல் செய்தல் – மாநில புதுமை நிதி | 3.00 |
| 20 | கைத்தறிகளுக்கு மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரங்களை கொள்முதல் செய்தல் – மாநில புதுமை நிதி | 225.00 |
| 21 | மாநில ஜவுளி ஆலோசனைக் குழு – அலுவலகச் செலவுகள் மற்றும் அரசு சார்பற்ற உறுப்பினர்களுக்குப் பயணப்படி நாட்படி | 10.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2017–2018 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 22 | ஈரோட்டிலுள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம் | **3.12** |
| 23 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | **2,323.76** |
| 24 | அமலாக்கப் பிரிவின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | **248.48** |
| 25 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்– தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை | **297.00** |
| 26 | இதர இனங்கள் (அடையாள ஒதுக்கீடுகள்) | **0.22** |
| | மொத்தம் | **1,23,468.68** |

**ஓ.எஸ்.மணியன்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**